பக்கங்கள் - 25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 24 வெள்ளிக்கிழமை 10.10.2025 | அதிர்வு 71

## 2 சிறுவர்களை காணவில்லை!

### பெற்றோர் முறைப்பாடு

சிறுவர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளர 04







# 14 காற்றாலைகளையும் அமைப்பதில் அரசு உறுதி

## ஆனால் ஜனாதிபதியுடன் ஒப்பந்தம் எதனையும் தாம் செய்யவில்லை என்கிறார் மன்னார் ஆயர்

(மன்னார் நிருபர்)

"மன்னாரில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 14 காற்றாலைகளையும் அமைப்பதே அரசாங்கத்தின் முடிந்த முடிவாக உள்ளது. ஆனால் நான் அங்கு ஜனாதிபதியுடன் எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை."

- இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

"ஜனாதிபதியைச் சந்தித்து மன்னார் மக்கள் ஏன் காற்றாலை வேண்டாம் 04

# சகல மதத் தலைவர்களும் இணைந்தால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்!

## கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பௌத்த மத பீடத்தில் உள்ளவர்கள் நினைத்தால் ஒரு நாளிலேயே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று தெரிவித்துள்ள கலாநிதி ஆறு. திருமுருகன், நாட்டிலுள்ள அனைத்து மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதியைச் சந்தித்து அழுத்தம் கொடுப்பதன் மூலமே நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் 03






கடைசியில் பெரும் இழுபறிகள், தடைகளுக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும், அதிலிருந்து பிரிந்து தனித்துவக் கட்சியாக உருவெடுத்துள்ள சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியம் ஒருவாறு பிறந்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசியல் திட்டத்தைத் தொடங்குவதற்கான முன்மொழிவை ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு ஒருமனதாக அங்கீகரித்துள்ளது.

இந்த முடிவை அறிவித்த எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவும் நிர்வாகக் குழுவும் ஒரு பொதுவான கொள்கைக் கட்டமைப்பில் இணைந்து பணியாற்றுவதற்கான 03



# மீளக் கட்டப்பட்ட ‘அணையா விளக்கு’ தூபி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – செம்மணியில் விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்ட அணையா விளக்கு நினைவுத் தூபி அன்றைய தினமே அதே இடத்தில் மீளக் கட்டப்பட்டுள்ளது.

அணையா விளக்கு நினைவுத் தூபி விஷமிகளால் நேற்று புதன்கிழமை அதிகாலை அடித்து உடைக்கப்பட்டிருந்தது.

"யாழ்ப்பாணம் வரவேற்கின்றது" என்ற வளைவுக்கு அருகில் கடந்த ஜூன் மாத இறுதியில் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி “அணையா விளக்கு“ போராட்டம் முனெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் போது “அணையா விளக்கு“ ஏற்றப்பட்டது. போராட்டத்தின் முடிவில் அந்தப் பகுதியில் “அணைய விளக்கு“ நினைவுத் தூபி ஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்த நினைவுத் தூபியைத்தான் விஷமிகள் நேற்று அதிகாலை அடித்து உடைத்திருந்தனர். இதையடுத்து நினைவுத் தூபியை மீள அமைக்கும் பணிகள் நேற்றே ஆரம்பிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.







# ஹன்டர் - மோட்டார் சைக்கிள் விபத்து: காயமடைந்த வயோதிபர் உயிரிழப்பு!

ஹன்டர் – மோட்டார் சைக்கிள் என்பன விபத்துக்கு உள்ளாகியதில் படுகாய மடைந்த வயோதிபர், மேலதிக சிகிச் சையின்போது உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் – நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த வேலன் கனகலிங்கம் (வயது 69) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த 5ஆம் திகதி இந்த விபத்து சம்பவித்தது. இதன்போது மோட்டார்சைக்கிளில் பயணித்த குறித்த வயோதிபரும், அவருடைய மனைவியும் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்தநிலையில், மேலதிக சிகிச்சையின்போது, நேற்று முன்தினம் அந்த வயோதிபர் உயிரி ழந் தார். மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண் டார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு உடன்பாட்டை எட்டியுள்ளன எனவும் கூறினார்.

நாட்டையும் அதன் மக்களையும் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு நடை முறை, ஜனநாயக மற்றும் முற்போக் கான தீர்வுகளை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என்றும், இரு கட்சிகளும் தத்தமது அடையாளங் களைத் தக்கவைத்துக் கொள்வதை உறுதி செய்கின்றன எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்து ழைக்க தமது கட்சியின் செயற்குழு முதல் முறையாக ஒரு வரலாற்று முடிவை எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவே எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்கிறார் என்றும், தலைமைத்துவம் குறித்து எந்த சர்ச் சையும் இல்லை என்றும் அவர் தெளிவு படுத்தினார்.

இந்த ஒன்றுபட்ட அரசியல் பயணத் திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் அடி மட்ட உறுப்பினர்கள் தங்கள் ஆசீர் வாதங்களையும் ஆதரவையும் தெரி வித்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இணக்கம் காணப்பட்டுள்ள கூட்டு அரசியல் திட்டத்தின் படி, இனி வரக் கூடிய மாகாண சபைத் தேர்தல் உட்பட்ட எல்லாத் தேர்தல்களிலும் இரு கட்சியினரும் கூட்டாகச் சேர்ந்து போட்டியிடுவரா என்பது குறித்து இனித்தான் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இந்த இணைப்பு அல்லது இணைவு வலிமையான எதிர்க்கட்சி ஒன்றின் உருவாக்கத்துக்கு வழி செய்யும் என்று நம்பலாம்.

* * *

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புத் தாக்குதல்களுக்குப் பின்னணியில் இருந்த முக்கிய சூத்திரதாரி அடையா ளம் காணப்பட்டுள்ளார் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவிசெனவிரத்ன வெளிப்படுத்தியுள்ளார் என்று இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிஸாம் காரியப்பர் தெரிவித்திருக்கின்றார்.

உயர் பதவிகளுக்கான நியமனம் தொடர்பான குழுவில் தான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக செயலாளர் அதை வெளிப்படுத்தினார் என நிஸாம் காரியப்பர் எம்.பி., தமது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள் ளார்.

“உயர் பதவிகளுக்கான குழுவின் முன், எனது கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, ரவி செனவிரத்ன, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள முக்கிய சதிகாரரை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம் என்று கூறினார்” - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் -

ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் அடையாளம் காணப் பட்டுள்ளார் எனவும், இந்தியா இதற்குப் பின்னால் இருப்பதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன நாடாளுமன்ற உயர் பதவிகள் குறித்த குழுவிடம் தெரிவித் தார் என சமூக ஊடகங்களில் பரவும் செய்தி தவறானது என பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில், இந்தச் செய்தி உண் மைக்குப் புறம்பானது எனவும், அதனை கடுமையாக மறுப்பதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விளக்கமளித்த ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, 2025.10.08 அன்று நாடாளுமன்ற உயர் பதவிகள் குறித்த குழுவின் அழைப்பைத் தொடர்ந்து தாம் நேரில் பிரசன்னமாகி, எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார் எனவும், ஈஸ்டர் தாக்கு தல்களுக்குப் பின்னால் இந்தியா இருப் பதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் கூறவில்லை எனவும் அவர் திட்டவட்டமாக வலியுறுத்தினார்.

மேலும், இத்தகைய தவறான செய்திகளைப் பரப்புவோர் மீது விசா ரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள தாகவும், இது தொடர்பாக பொருத்த மான சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள ரவி செனவிரத்னவின் சட்டத் தரணிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சகல மதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சர்வமத மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த நாட்டில் இருக்கின்ற மதங்களில் அதிகம் பாதிக்கப்பட்ட மதம் என்றால் அது சைவ மதம்தான். இந்த நாட்டில் யுத்தம் ஏற்பட்ட காலம் முதல் பாதிக்கப்பட்ட மதம் சைவ மதம். இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள். பல கோயில்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அழிக்கப்பட்டுள்ளன. எவ்வளவோ மக்கள் இந்தப் போரில் மரணத்தைச் சந்தித்தார் கள். குழந்தைகள் முதல் மூத்தோர் வரை இறந்தார்கள்.

இன்றைக்கு மதத் தலைவர்கள்தான் இந்த நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று குரல் கொடுக்க வேண் டிய தேவை இருக்கின்றது. அதனாலேயே சர்வமதத் தலைவர்கள் கூடியுள்ள இந்தச் சபையினரை வாழ்த்துவதோடு, நான் கேட்பது இலங்கையில் இருக்கின்ற மதத் தலைவர்கள் உடனடியாக நீண்ட கால மாக நாட்டில் இருக்கின்ற பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இதற்காக யார் அர சாங்கத்தில் இருக்கின்றார்களோ அவர் களிடம் வலியுறுத்த வேண்டும்.

35 வருட யுத்தத்துக்குப் பின்னராக அழிக்கப்பட்ட பௌத்த கோயில்கள் கட்டப் பட்டு விட்டன. நீண்ட காலமாக பௌத்த விகாராதிபதி இங்கு பணியாற்றுகின்றார். வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை காங் கேசன்துறையில் இருந்த ஆதிசிவன் கோயில் அழிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக எத்தனையோ கோயில் கள், மடங்கள் என பல வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

யுத்தம் முடிந்து எத்தனை வருடங்க ளாகிவிட்டன. இன்று வரைக்கும் நாம் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம் – இன்னமும் அனுமதியில்லை. அரசியல் பிரமுகர்கள், மதத்தலைவர்கள் இங்கு வரும்போது எமது ஆலயங்களை, பிரசித்தி பெற்ற இடங்களை விடுவிக்கக் கோரினோம். சரி என்பார்கள், விடுவிப் போம் என்பார்கள். ஆனால், அவை நடந்தபாடில்லை.

இன்றைக்கும் மத வலிமையோடுதான் இந்த நாடு இருக்கின்றது. இந்த நாட்டின் பௌத்த பீடத்தில் உள்ளவர்கள் இனப் பிரச்சினையைத் தீர்க்க நினைத்தி ருந்தால், எல்லா மதத்தவர்களையும் அழைத்து ஆட்சியில் உள்ளவர்களுடன் கதைத்து ஒரு நாளில் இனப்பிரச்சினை யைத் தீர்க்க வேண்டும் என்று கூறியிருந் தால் இந்த மண்ணில் உயிர்களை இழக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.” – என்றார்.




## 14 காற்றாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறுகின்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினேன். எனினும், அரசாங்கத்தின் நிலைப்பாடு அந்த 14 காற்றாலைகளையும் மன்னார் தீவில் திட்டமிட்டபடி அமைக்க வேண்டும் என்பதே. அதில் அவர்கள் மிகவும் திடமாக இருக்கின்றார்கள்.” – என்றும் மன்னார் ஆயர் மேலும் கூறினார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று வியாழக்கிழமை மாலை சர்வமதக் குழு, பொது அமைப்புக்கள், போராட்டக் குழு ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“நான் ஜனாதிபதியைச் சந்தித்தேன். இதன்போது காற்றாலை தொடர்பான எமது பிரச்சினையை அவரிடம் முன்வைத்தேன். ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நான் அரச அதிபரோடு இணைந்து இந்து மற்றும் இஸ்லாமிய மத குருக்களையும் அழைத்துச் செல்வதாக இருந்தோம். ஆனால், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் ஜனாதிபதியை மூன்றாவது தடவையாகச் சந்தித்தேன். முதல் தடவையாகத் தனியாகவும், இரண்டாவது தடவையாக ஆயர் மன்றத்துடன் இணைந்து சென்று சந்தித்தோம்.

இந்தப் பிரச்சினையை நான் இலங்கை ஆயர் மன்றத்துக்கும் எடுத்துச் சொன்னேன். இலங்கை ஆயர் மன்றம் எங்களுடன் இணைந்து செயற்பட்டார்கள். கர்தினால், ஆயர் மன்றத் தலைவர் ஆகியோரினால் முன்னெடுக்கப்பட்ட சந்திப்புக்கும் சென்றேன்.

இறுதியாக கடந்த 2 தினங்களுக்கு முன் ஜனாதிபதியைத் தனியாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அனைவரோடும் இணைந்து செல்வதாக இருந்தும் அந்தச் செயற்பாடு எனக்குக் கைகொடுக்கவில்லை.

இருந்தும் நான் தனியாகச் சென்று இந்த விடயம் குறித்துக் கதைத்த போது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்றால் அவர்கள் அந்த 14 காற்றாலைகளையும் மன்னார் தீவில் அமைப்பதிலே மிகவும் திடமாக இருக்கின்றார்கள்.

நான் அங்கு எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. நான் எங்களுடைய மக்களின் நிலைப்பாட்டையும், மன்னாரில் ஏன் காற்றாலை வேண்டாம் என்று மக்கள் கூறுகின்றார்கள் என்ற நிலைப்பாட்டையும் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினேன்.

எனினும் ஜனாதிபதியினுடைய நிலைப்பாடு என்னவென்றால் அந்த 14 காற்றாலைகளையும் அமைத்ததன் பின்னர் மன்னாரில் கனிய மணல் அகழ்வையோ அல்லது மேலதிக காற்றாலைகளையோ ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற வாக்குறுதியை அவர் மீண்டும் மீண்டும் கூறினார்.

கனிய மணல் அகழ்வு மன்னாரில் முற்றாக இல்லை என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்தினார்.

அமைச்சரவை ஊடாக அதனை எமக்கு உறுதிப்படுத்தித் தருவதாகவும், குறித்த 14 காற்றாலைகளையும் மக்கள் அனுமதிக்கின்ற போது எந்தவோர் அரசாங்கமும் இந்தச் சிறிய தீவில் கனிய மணல் அகழ்வு மற்றும் மேலதிக காற்றாலை அமைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு அனுமதிக்கப் போவதில்லை எனவும், அதற்கும் அமைச்சரவை ஊடாக உறுதிமொழி வழங்குவேன் எனவும் ஜனாதிபதி கூறினார்.

எது, எப்படியாக இருந்தாலும் நான் மன்னாரில் மக்களைச் சந்தித்ததன் பிற்பாடு இதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் என்று கூறி விட்டு அங்கிருந்து வந்தேன். நாங்கள் எவ்வித ஆவணத்திலும் கையொப்பம் இடவில்லை.

எனினும் உண்மைக்குப் புறம்பான செய்திகள் இணைய ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

நான் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. தாங்களாகவே ஊகித்து வெளியிட்ட செய்திகளாக அவை அமைந்துள்ளன.

போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்களுடனும், மக்களுடனும் இன்னும் கலந்துரையாட வேண்டியுள்ளது. அதன் பின்னர் நாங்கள் ஒரு நிலைப்பாட்டுக்கு வருவோம்.” – என்றார்.

**ஆசிரியர் குறிப்பு**

1. இந்தச் செய்தியை நேற்றே காலையில் முந்திக் கொண்டு இணைய ஊடகத்தில் வெளியிட்டது எங்கள் பத்திரிகை மட்டுமே.

2. எங்கள் பத்திரிகைச் செய்தியைத்தான் நாங்களாகவே ஊகித்து வெளியிட்ட செய்தியாக வணக்கத்துக்குரிய மன்னார் ஆயர் அர்த்தப்படுத்தியுள்ளார்.

3. எங்களது நேற்றைய செய்தியையும் ஆயருடைய இந்தப் பேட்டியையும் வாசிக்கும் வாசகர்கள் நாங்கள் வெளியிட்ட செய்தி வெறும் ஊகத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டதா என்பதைத் தாங்களே தீர்மானித்துக் கொள்வார்கள் எனக் கருதுகின்றோம்.

4. ஜனாதிபதியும் மன்னார் ஆயரும் தனித்து இந்தப் பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்தி இரண்டு நாள்களாகியும், அது குறித்து தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் தரப்புகளுக்கும் மக்களுக்கும் மூச்சே விடாத ஆயர் தரப்பு இப்போது நாங்கள் செய்தி வெளியிட்ட பின்னர்தான் – அதுவும் ஊடகங்கள் பிய்த்துப் பிடுங்கி கேட்ட பின்னணியில் தான் – இந்தக் கருத்தை வெளியிட்டு இருக்கின்றார். தமது கோரிக்கையின் மீது தொடர் போராட்டம் நடத்தி வரும் மக்களுடன் இன்னும் அவர் உரையாடி முடிவேதும் எடுத்துப் பகிரங்கப்படுத்தவில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

5. போராட்டம் நடத்தும் மக்களோடு பேசித்தான் முடிவெடுப்போம் என்று ஜனாதிபதியிடம் கூறிவிட்டு வந்திருக்கும் ஆயர், அவர் கூறியபடி ஜனாதிபதியுடன் இது விடயத்தில் இணக்கம் ஏதும் காணாமல் வந்திருக்கும் நிலையில், போராட்டம் நடத்தும் மக்களுடன் பேசிவிட்டு என்ன முடிவு எடுக்கின்றார், அது, அவர் நாங்கள் வெறும் ஊகத்தின் அடிப்படையில் வெளியிட்ட செய்தி என்ற நிலைப்பாட்டுக்கு மாறானதாக இருக்குமா என்பவற்றை எல்லாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

(ஆ – ர்)

## 2 சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

கண்டி, தென்னகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய இரண்டு சிறுவர்களே காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போன சிறுவர்களில் ஒருவரது தாயார் இது தொடர்பில் கண்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு அளித்துள்ளார்.

சிறுவர்கள் இருவரும் நேற்று முன்தினம் புதன்கிழமை வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சிறுவர்கள் இருவரும் மகாவலி கங்கைக்குச் செல்வதைக் கண்டதாகப் பிரதேச மக்கள், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜெனிவா விவகாரத்தை வைத்து ஒருபோதும் அரசியல் செய்யோம்!

## அமைச்சர் நளிந்த அறிவிப்பு

ஜெனிவா விவகாரத்தை வைத்து ஒருபோதும் அரசியல் செய்யப்போவதில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களும் அரசியல் இருப்புக்காகவே கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவ்வாறான செயற்பாடுகளில் நாங்கள் ஒருபோதும் ஈடுபடப்போவதில்லை. அதுபோல், அத்தகைய செயற்பாடுகள் ஈடுபடுவதற்கு எவரையும் அனுமதிக்கவும் மாட்டோம்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்திவிட்டார். ஜெனிவா தீர்மானத்துடன் நாங்கள் உடன்படவில்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் மாற்றங்களைச் செய்ய மாட்டோம்.

கடந்த காலங்களில் இலங்கையின் நீதித்துறையுடைய சுயாதீனம் தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் சந்தேகங்கள் இருந்தன. ஆனால், தற்போது நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில், நீதித்துறையின் சுயாதீனம் எவ்வளவுதூரம் மேம்பட்டுள்ளது என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். ஆதலால், இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்குச் சர்வதேசம் தேவையில்லை என்பதே எமது நிலைப்பாடு.” – என்றார்.

# இலங்கை 2028 ஆம் ஆண்டில் கடன் நெருக்கடியில் சிக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

தற்போதைய வேகத்தில் அரசாங்கம் பயணிக்குமானால், இலங்கை 2028 ஆம் ஆண்டு கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தில் பாரிய பொருளாதார சவாலை எதிர்கொள்ளும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில் புதிய நாணய நிதிய நிபந்தனைகளின் கீழ் ஒரு புதிய கடன் மறுசீரமைப்பு ஏற்பாடு பற்றி குறிப்பிடப்பட்டாலும், நடைமுறையில் முந்தைய நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்ட அதே ஒப்பந்தம் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது.

மின்சாரக் கட்டணத்தை 33 வீதம் குறைப்பதாக அளித்த வாக்குறுதிகள், 9,000 ரூபா கட்டணத்தை 6,000 ரூபாவாகவும், 3,000 ரூபா கட்டணத்தை 2,000 ரூபாவாகவும் குறைத்தல் தொடர்



பான விடயம் இன்னும் நிறை வேற்றப்படவில்லை. அதே நேரத்தில் கட்டணங்கள் இப்போது மீண்டும் 6.8 வீதம் உயரும்.

சரியான செலவு பகுப்பாய்வு இல்லாமல் அரசாங்கம் இத்தகைய முடிவுகளை எடுக்கின்றது.

159 இடங்களின் பெரும்பான்மை இருந்தபோதிலும், அரசாங்கம் நாணய நிதியத்தின் ஒவ்வொரு தாளத்திற்கும் நடனமாடுகிறது. மக்கள் மாற்றத்திற்காக வாக்களித்தனர் – நாணய நிதியம் இயக்கும் அதே பாதையில் இயங்குவதற்காக அல்ல.

2028 முதல் இலங்கை ஆண்டு தோறும் 5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். கொள்கை மாற்றங்கள், நிறுவன தோல்விகள் மற்றும் பலவீனமான ஒழுங்குமுறை நடைமுறைகள் ஆகியவை சாதகமான முதலீட்டு சூழலுக்கு தடைகளாக இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறையின் சமீபத்திய முதலீட்டு அறிக்கையில் குறிப்பிடத்தப்பட்டது.

வறுமை நிலைகள் கடுமையாக அதிகரித்துள்ளது. உண்மையான வேதனங்கள் வீழ்ச்சியடைதல், பலவீனமான வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உணவு பற்றாக்குறை , பணவீக்கம் ஆகியவை அதிகரித்துள்ளன.” என்றார்.

(விரிவான செய்தி 16ஆம் பக்கத்தில்)

# துறைமுகத்தில் இருந்து நாட்டுக்கு 32.2 பில்லியன் ரூபா இலாபம்

கொழும்பு துறைமுகம் இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் சுமார் 32.2 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இது, 71 சதவீத வளர்ச்சி என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டில் முதல்



8 மாதங்களில், 18.9 பில்லியன் ரூபா ஈட்டியுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு முனையம் மற்றும் ஜய கொள்கலன் முனையம் போன்றவற்றின் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்ததன் மூலம் எதிர்காலத்தில் திறனை மேலும் அதிகரிப்பதற்கு நம்புவதாக இலங்கை துறைமுக ஆணைக்குழுத் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அணையாது எழுச்சி

யாழ்ப்பாணம், செம்மணி வளைவுப் பகுதியில் அமைக்கப்பட்ட ‘அணையா விளக்கு’ நினைவுத் தூபி விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

‘யாழ்ப்பாணம் வரவேற்கின்றது’ என்ற வளைவுக்கு அருகில் கடந்த ஜூன் மாத இறுதியில் செம்மணி மனிதப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி ‘அணையா விளக்கு’ போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் போது ‘அணையா விளக்கு’ ஏற்றப்பட்டு இருந்தது. போராட்டத்தின் முடிவில் அந்தப் பகுதியில் அணையா விளக்கு நினைவுத் தூபி ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்த நினைவுத் தூபியே தற்போது விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழ்வியல் உரிமைகளுக்கும் இருப்புக்குமாகப் பெரும் விடுதலைப் போராட்டம் நடத்தி வரும் தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரை இது ஒன்றும் புதிய விடயம் அல்ல.

தமிழர் தாயக மண்ணில் தமிழர் தேசத்தின் இருப்பையே அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் எதிரிகள், தமிழர்களின் இனத்துவ அடையாளத்தையே காலம் காலமாக இலக்கு வைத்து அழித்து வருகையில் இத்தகைய மக்களின் உணர்வெழுச்சி வெளிப்பாடான ‘அணையா விளக்கு’ தூபி போன்றவற்றை உடைப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல.

தமிழ் மக்கள் தங்களுடைய இனத்துவத் தனித்துவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் ஒன்று கூடி உணர்வெழுச்சியோடு அடையாளப்படுத்தும் இத்தகைய நினைவுச் சின்னங்களை அழிப்பது பேரினவாதத்தினதும் அதன் கைக்கூலிகளினதும் காலாதிகால விஷமப் பணியாக இருந்து வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் தொடர்பான நினைவுச் சின்னத்தில் தொடங்கி, தியாகி சிவகுமாரனின் சிலை, தியாகி திலீபனின் தூபி, வெடுக்குநாறிமலை ஆலய வழிபாட்டுக் கட்டமைப்பு என்று இத்தகைய அழிப்பு வேலைகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

ஆனால் இத்தகைய நாச வேலைகள் மூலம் - அழிப்பு நடவடிக்கைகள் மூலம் - தமிழர்கள் மனதில் பீறிட்டு எழுகின்ற அவர்களது இனமான உணர்வை அழித்து அடக்கி விட முடியாது. மாறாக அவை மேலும் கிளர்ந்து, புதிய வடிவத்தில், புதிய உத்வேகத்துடன், புதிய உறுதியுடன், வெளிப்பட்டு வந்திருக்கின்றமையையே நாம் கண்டு வந்திருக்கின்றோம்.

‘அணையா விளக்கு’ நினைவுத் தூபியைச் சேதப்படுத்தி, அழித்தமை மூலம் காணாமலாக்கப்பட்ட தங்களின் பல்லாயிரம் உறவுகளுக்காக சர்வதேச நீதி கோரி தமிழ் மக்கள் நடத்துகின்ற எழுச்சிப் போராட்டங்களையும் இந்தப் போராட்டங்களின் பின்னால் கனன்று கொண்டிருக்கும் அவர்களின் ஆவேசத்தையும் அடக்கி விடலாம் என்று எதிரிகளும் விஷமிகளும் கருதினால் அவர்கள் ஏமாந்துதான் போவார்கள்.

‘சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணம் நின்று விடும்’ என்று கருதும் அபத்த வேலைதான் ‘அணையா விளக்கு’ தூபியை அழித்தால் மக்களின் போராட்ட உணர்வெழுச்சி அடங்கிவிடும் - அதில் சேதம் ஏற்பட்டு விடும் - அது பங்கப்பட்டு விடும் - என்று கருதும் முட்டாள்தனமான சிந்தனையும் கூட.

# ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பிணை கோருவது பயனற்றது

## அமைச்சர் விஜித்த ஹேரத் சபையில் தெரிவிப்பு

“ஜெனீவா எமக்கு கடவுளோ அல்லது பேயோ அல்ல. எமது மக்களின் மனித உரிமைகளை அரசியலாக்கி குறுகிய அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வது எமது நோக்கமல்ல, மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு கோருவது ஒரு பயனற்ற செயல். ”

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் விசே கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இலங்கை மீதான தீர்மானம் கடந்த 6 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்டதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்ததைக் கண்டேன். எனது உரையின் ஆரம்பத்தில் நான் விளக்கியது போல், மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு கோருவது ஒரு பயனற்ற செயல். முந்தைய அரசாங்கங்கள், தெரிந்தே பொதுப் பணத்தையும் நேரத்தையும் வீணடித்து, வாக்கெடுப்பு தோல்வியடையும் என்ற நம்பிக்கையில் செய்த அந்த பயனற்ற, அந்த தவறான செயலை மீண்டும் செய்வது எங்கள் அரசாங்கத்தின் கொள்கை அல்ல. இந்தத்தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டபோது, இந்த விஷயத்தில் எங்கள் நிரந்தர பிரதிநிதி இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்தார்.

செப்டம்பர் 8 ஆம் திகதி இலங்கை தொடர்பான உரையாடலின் போது நான் கூறியதையும், அக்டோபர் 6ஆம் திகதி ஜெனீவாவில் நிரந்தரப் பிரதிநிதி தீர்மானம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையையும் மீண்டும் வலியுறுத்துகிறேன். அக்டோபர் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம், இலங்கை தொடர்பான முந்தைய தீர்மானங்களுடன் ஒப்பிடும்போது பல நேர்மறையான அம்சங்களைக் கொண்டிருந்தது. இது இலங்கையில்



ஏற்பட்டுள்ள ஜனநாயக மாற்றம், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை எடுத்துக்காட்டியது.

முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க செயல்முறை பாராட்டப்பட்டுள்ளது. இது தேசிய நிறுவனங்களுக்கு பிரச்சினைகளைத் தீர்க்க இடமளித்துள்ளது. இந்தத் தீர்மானம் 2021 தீர்மானத்தின் நீட்டிப்பு என்பதால், அதன் இறுதி அத்தியாயம் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் பணிகளைத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. நான் முன்னர் குறிப்பிட்டது போல, இது ஒரு உள்ளக பொறிமுறை அல்ல என்பதால் எங்கள் அரசாங்கம் இந்த பொறுப்புக்கூறல் திட்டத்தை நிராகரிக்கிறது. இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிக்கும் போது 6 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இதை நாங்கள் கடுமையாக வலியுறுத்தினோம். இது பிளவுகளை தீவிரப்படுத்தும் மற்றும் அரசாங்கம் தொடங்கிய திட்டங்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று நாங்கள் சுட்டிக்காட்டினோம்.

அரசாங்கம் தொடங்கிய உள்ளக பொறிமுறை மற்றும் மனித உரிமைகள் பேரவை நாடுகளில் அதற்காக கட்டமைக்கப்பட்டு வரும் நம்பகத்தன்மையின் அடிப்படையில், 2021 இல் நிறுவப்பட்ட இந்த பொறுப்புக்கூறல் திட்டத்தை விரைவில் முடித்து, நமது சொந்த பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய சூழ்நிலையை விரைவில் உருவாக்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள ஜனநாயக மாற்றம், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், அத்துடன் அரசாங்கம் தொடங்கிய உள்நாட்டு வேலைத்திட்டம் மற்றும் இதற்காக மனித உரிமைகள் பேரவை நாடுகளில் கட்டமைக்கப்பட்டு வரும் நம்பகத்தன்மையின் அடிப்படையில், 2021 இல் நிறுவப்பட்ட இந்த பொறுப்புக்கூறல் திட்டத்தை முடித்து, எங்கள் பிரச்சினைகளை நாமே தீர்க்கக்கூடிய சூழ்நிலையை விரைவில் உருவாக்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

அரசாங்கம் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தைப் பாராட்டி வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் முன்மொழிவை சமர்ப்பித்த நாடுகளின் குழுவின் சார்பாகப் பேசிய ஐக்கிய இராச்சியம் வெளியிட்ட அறிக்கையிலிருந்தும் இது தெளிவாகிறது. அந்தக் குழுவைத் தவிர, சீனா, பங்களாதேஷ், மாலைத்தீவு, கியூபா, ஜப்பான், தென் கொரியா, ஐரோப்பிய ஒன்றியம், எத்தியோப்பியா, கோஸ்டாரிகா மற்றும் உலகின் பல்வேறு பிராந்தியங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிற நாடுகள் உட்பட பேரவை உறுப்பினர்களாக உள்ள பல நாடுகள் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பாராட்டி அறிக்கைகளை வெளியிட்டன. மேலும், கடந்த செப்டம்பர் 8 ஆம் திகதி இலங்கை தொடர்பாக நடைபெற்ற உரையாடலில், சுமார் 43 நாடுகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தின, கிட்டத்தட்ட அனைத்து நாடுகளும் உள்நாட்டு செயல்முறைகள் மூலம் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டின. மனித உரிமைகளை அரசியல்மயமாக்குவது நமது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல.” – என்றார்.

# பாடசாலை கல்வி செயற்பாடுகளுக்கான நேர நீடிப்புக்கு ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

பாடசாலை கல்வி செயற்பாடுகளுக்கான நேரத்தை, நீடிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு, இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் ஆசிரியர் இடமாற்றங்களில், அரசியல் தலையீடுகள் இருப்பதாகவும் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.






# மனத்தின் நலன், மனிதகுலத்தின் நம்பிக்கை



- நடராசா கோபிராம் -
(உளவியல் சிறப்புக் கலைமாணவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

உலக மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் உடல் நலனுக்கு இணையான முக்கியத்துவம் பெற்றது மன நலம் – உள நலம் (Mental Health). ஒரு சமூகத்தின் நிலையான வளர்ச்சியும், ஒற்றுமையும், பொருளாதார முன்னேற்றமும், கல்வி தரமும், குடும்ப பிணைப்பும் இவை அனைத்தும் மனநலத்துடன் ஆழமாக பிணைந்திருக்கின்றன. ஆனால், நீண்ட காலமாக உலக மக்கள் மனநல பிரச்சினைகளை புறக்கணித்து வந்தனர். இதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 10 ஆம் தேதி “உலக மனநல தினம் (World Mental Health Day)” அனுஷ்டிக்கப்படுகிறது.

இது, World Federation for Mental Health (WFMH) என்ற அமைப்பினால் 1992 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. அதன் பின்பு, உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் இதனைப் பரவலாக்கின. இன்று உலகெங்கும் 150க்கும் மேற்பட்ட நாடுகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவ மையங்கள், அரசு மற்றும் சமூக அமைப்புகள் இந்நாளை மனநல விழிப்புணர்வுக்கான தளமாகக் கொண்டாடுகின்றன.

### மனநலத்தின் உளவியல் (Psychological Significance)

மனநலத்தை உளவியல் (Psychology) அடிப்படையில் புரிந்து கொள்வது அவசியம். மனநலம் என்பது வெறும் மனநோய் இல்லாமையை மட்டும் குறிக்கவில்லை. அது ஒருவரின் அமைதி, சிந்தனைத் தெளிவு, உணர்ச்சி கட்டுப்பாடு, சமூக உறவுகளை பராமரிக்கும் திறன், சவால்களை எதிர்கொள்ளும் வலிமை ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகிறது.

Sigmund Freud தனது உளவியல் கோட்பாட்டில், மனம் மூன்று அடுக்குகளால் ஆனது அது Ego, Superego. இவற்றின் சமநிலையே மனநலத்தை தீர்மானிக்கிறது.

Carl Rogers “Person-Centered Therapy” மூலம், மனிதர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்கும் சூழல் மனநலத்தை உறுதி செய்கிறது என்றார்.

Aaron Beck - Cognitive Behavioral Therapy (CBT) மனச்சோர்வு மற்றும் பதற்றத்தை குறைக்கும் முக்கிய சிகிச்சை முறையாக உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இதன் மூலம், உளவியல் துறையில் மனநலத்தின் முக்கியத்துவம் சிகிச்சை மட்டுமல்ல, வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் அறிவியல் என்பதும் தெளிவாகிறது

உலக சுகாதார நிறுவனம் (WHO) வழங்கிய தரவுகளின்படி, உலக மக்கள் தொகையில் சுமார் 1 பில்லியன் பேர் மனநல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் மனச்சோர்வு (Depression) மற்றும் பதற்றக் கோளாறு (Anxiety Disorders) அதிகம் காணப்படுகிறது.

ஒவ்வொரு 40 விநாடிக்கும் ஒருவர் தற்கொலை செய்கிறார் என்பதே WHO வின் அதிர்ச்சியூட்டும் புள்ளிவிவரம்.

கோவிட்–19 பேரழிவுக்குப் பின், மனநல பிரச்சினைகள் 25 வீதம் வரை அதிகரித்துள்ளன.

குறிப்பாக, இளம் வயதினரின் தற்கொலை விகிதம் உலகின் பல நாடுகளில் கவலைக்குரிய அளவில் உயர்ந்துள்ளது.

நமது நாட்டைப் பொருத்தமட்டில் ஐந்து பேரில் ஒருவருக்கு மனநோய் இருப்பதாக சொல்லப்படுகிறது. தற்கொலைகளில் 50 வீதம் மன நோய்களால் ஏற்படுத்துவதாக தெரிய வருகிறது. உலகளாவிய ரீதியிலும் பெரும்பாலான இளைஞர்கள் மனச்சோர்வு எனப்படும் பாரிய மன நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கான பிரதான காரணங்களாக தொலைபேசி அடிமை மற்றும் இணைய அடிமைத்தனம், போதை அடிமை காணப்படுகின்றன.

இதனால், மனநல பிரச்சினைகள் ஒரு உலகளாவிய சவால் எனக் கருதப்படுகின்றன. அதே சமயம், மனநல சிகிச்சைக்கு செலவிடப்படும் நிதி உலகளவில் மருத்துவ செலவினங்களில் 2 வீதத்துக்கும் குறைவு தான். இது மிகப்பெரிய சமநிலையின்மையை காட்டுகிறது.

இலங்கையில் மனநலத்துக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் கடந்த இருபது ஆண்டுகளில் படிப்படி

தொடர்ச்சி▼

# மனத்தின் நலன், மனிதகுலத்தின் நம்பிக்கை

தொடர்ச்சி▲

யாக அதிகரித்து வந்தாலும், இன்னும் பல சவால்கள் உள்ளன.

சமூகக் களங்கம் ஸ்ரிக்மா (Stigma) மனநோயாளி களைக் குறைத்து மதிக்கும் பார்வை இன்னும் நீங்கவில்லை.

போர் மற்றும் இயற்கை பேரழிவுகள்: உள்நாட்டுப் போர், 2004 சுனாமி, கொவிட் தொற்று மற்றும் அண்மைக்கால பொருளாதார நெருக்கடி ஆகியவை பல ஆயிரக்கணக்கான மக்களின் மனநலத்தை பாதித்துள்ளன.

சிறுவர் மற்றும் இளைஞர்கள்: கல்விச் சுமை, வேலை வாய்ப்பு பற்றாக்குறை, சமூக அழுத்தங்கள், போதைப்பொருள் அடிமை காரணமாக, இளைஞர் களிடையே மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண் ணங்கள் அதிகரித்துள்ளன.

சுகாதார வசதிகள்: இலங்கையில் 10 இலட்சம் மக்களுக்கு சுமார் 0.3 வீதம் மனநல மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். WHO பரிந்துரைத்த அளவுக்கு இது மிகக் குறைவு.

ஆனால், நேர்மறை மாற்றங்களும் உள்ளன: இலங்கையில் National Mental Health Policy (2005




- 2015, தொடர்ந்து 2016 - 2025) நடைமுறை யில் உள்ளது. பல்வேறு பல்கலைக்கழகங்கள் உள வியல் படிப்புகளை வழங்குகின்றன. சமூக மட்டத் தில் NGOs மற்றும் சுநன ஊசழளள போன்ற அமைப் புகளும் மனநல விழிப்புணர்வை வளர்த்துக் கொண் டிருக்கின்றன.

## ஆய்வுகள் மற்றும் தரவுகள் (Research & Statistics)

மனநல பிரச்சினைகள் குறித்து பல்வேறு ஆராய்ச்சி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Lancet Psychiatry (2021) வெளியிட்ட ஆய்வின் படி, மனச்சோர்வு மற்றும் பதற்றம் உலகளவில் பெண்களிடம் ஆண்களை விட அதிகமாக உள்ளது.

Sri Lanka Journal of Psychiatry யில் வெளியான கட்டுரைகள், போருக்குப் பின் வடக்கிலும் கிழக்கிலும் Post-Traumatic Stress Disorder விகிதம் மிக உயர்ந்தது என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

University of Colombo மேற்கொண்ட ஆராய்ச்சியில், இலங்கை மாணவர்களில் 20 வீதம் பேர் மனநல சவால்களை எதிர்கொள்வதாக தெரியவந்துள்ளது.

இந்த தரவுகள், மனநலம் என்பது தனிநபர் பிரச்சினை அல்ல சமூக, பொருளாதார, கலாச்சார சவால் என்பதைக் காட்டுகின்றன.

## சமூக விளைவுகள் (Social Impact)

மனநல குறைபாடு ஏற்படுத்தும் சமூக விளைவுகள் மிகப் பரவலானவை:

1. குடும்ப உறவுகள் – மன அழுத்தம், வன்முறை, புரிதல் பற்றாக்குறை காரணமாக குடும்பங்கள் சிதறுகின்றன.

2. பொருளாதாரம் – உலகளவில் மனநல பிரச்சி னைகளால் ஆண்டுதோறும் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் உற்பத்தித் திறன் இழப்பாகும்

3. சமூக வன்முறை – மன அழுத்தம் மற்றும் போதைப்பழக்கம் சமூக குற்றச்செயல்களுக்கு வழிவகுக்கின்றன.

4. இளைஞர் எதிர்காலம் – கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் பின்தங்குவதை மனநல குறைபாடுகள் அதிகரிக்கின்றன.

## படைப்பாற்றல் மற்றும் விழிப்புணர்வு (Creativity & Awareness)

மனநலத்தை மேம்படுத்துவதற்கான படைப்பாற் றல் முயற்சிகள் மிகவும் முக்கியம்.

கலை மற்றும் இசை சிகிச்சை (Art & Music Therapy) மன அழுத்தத்தை குறைத்து, உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவுகிறது.

சமூக நாடகங்கள்,வீதி நாடகங்கள், குறும்படங்கள், கவிதைகள்-பொதுமக்களிடம்விழிப்புணர்வைஏற்படுத் தும் படைப்பாற்றல் முயற்சிகளாகக் காணப்படுகின் றன.

சமூக ஊடகங்கள் – இன்றைய தலைமுறைக்கு மனநல செய்திகள், சுய பராமரிப்பு குறிப்புகள், ஒன் லைன் ஆலோசனைகள் பரவுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சேர்க்கை நம் முன்னோர்கள் கூட மனநலத்தை மேம்படுத்துவதில் பங்களிக்கின்றவை யும் குறிப்பிடத்தக்கது.

## தீர்வுகள் மற்றும் முன்னேற்ற வழிகள்

மனநல பிரச்சினைகளை சமாளிக்க தனிநபர், குடும்பம், சமூகம், அரசு, உலகளாவிய நிலை என அனைத்திலும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை.

1. விழிப்புணர்வு – மனநோய்கள் குறித்து சமூகத் தில் உள்ள தவறான நம்பிக்கைகளை முறியடிக்க வேண்டும். இதற்கான உயர் கல்வி மற்றும் தெளிவு படுத்தல்கள் அவசியமாகின்றன.

2. ஆலோசனை சேவைகள் – பள்ளிகள், கல்லூ ரிகள், வேலைத்தளங்களில் மனநல ஆலோசகர்கள் இருக்க வேண்டும். மற்றும் கருத்தரங்குகள் விழிப் புணர்வு செயற்பாடுகளை நடாத்தல் வேண்டும்.

3. சட்ட, கொள்கைகள் – மனநல பாதுகாப்பு சட்டங் கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

4. சமூக ஆதரவு – குடும்ப பாசம், நண்பர்களின் புரிதல், சமூகத்தின் ஒத்துழைப்பு – இவை மனநல சிகிச் சையை எளிதாக்கும்.

5. ஆராய்ச்சி – இலங்கையிலும் உலகளாவிய அளவிலும் மனநல ஆராய்ச்சிகளுக்கான நிதி மற்றும் கல்வி வளங்கள் அதிகரிக்கப்பட வேண் டும்.

உலக மனநல தினம் என்பது ஒரு நாள் விழிப் புணர்வு மட்டுமல்ல. அது, ஒவ்வொரு நாளும் நம்மை நாமே பராமரிக்க வேண்டும், ஒருவருக்கொரு வர் ஆதரவாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பி டும் ஒரு உலகளாவிய இயக்கம். மனநலத்தை புறக் கணிப்பது மனித முன்னேற்றத்தையே புறக்கணிப் பதாகும்.

“உடல் நலம் போல் மன நலமும் வாழ்வின் அடிப்படை உரிமை” என்பதைக் கொண்டே நாம் சிந்திக்க வேண்டும்.

இலங்கை முதல் உலகம் வரை, ஒவ்வொரு சமு தாயமும் மனநலத்தை முன்னுரிமைப்படுத்தும் நாள் தூரத்தில் இல்லை. மனித குலம் மன அமைதியுடன் வாழும் உலகம் தான் உண்மையான முன்னேற்றத் தின் அடையாளம்.




# அழுத்தத்தில் வாழ்கிறோம் வாழ்வை உணர்கிறோமா?



இ.அபினகா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

உலகெங்கிலுமுள்ள மனநலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நாளாக ஒவ்வொரு ஆண்டும் “உலக மனநல தினம்” என்பது ஒக்ரோபர் 10 அன்று அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இது முதன் முதலில் 1992 ஆம் ஆண்டு உலக மனநலக் கூட்டமைப்பால் ஆரம்பிக்கப்பட்டது. மனநல தினத்தின் இந்த வருடத்துக்கான கருப்பொருள் “மனிதாபிமான அவசர நிலைமைகளில் மனநலம் “ என்பதாகும். அதாவது இந்தக் கருப்பொருளில் மனநலப் பாதுகாப்பு என்பது மனிதாபிமான அவசர நிலைகளால் பாதிக்கப்பட்ட அமைதியான காலத்தில் மட்டுமல்லாது போர், இயற்கை சீற்றங்கள், தொற்றுநோய்கள் அல்லது சமூகப் பதற்றங்கள் போன்ற பெரும் நெருக்கடிகளின் போதும் கிடைக்கக் கூடிய ஒரு அடிப்படை உரிமை என்பதை அழுத்தமாக வலியுறுத்துவதோடு மக்களின் மன ஆரோக்கியம் மற்றும் உளவியல் தேவைகளை ஆதரிப்பதன் அவசரத் தேவையை மையமாகக் கொண்டுள்ளது.

மன ஆரோக்கியம் என்பது வெறுமனே மன நோயின்றி இருப்பதல்ல. அது மனிதன் தனது திறமைகளை உணர்ந்து, வாழ்க்கையின் அழுத்தங்களை சமாளித்து, சமூகத்துடன் ஒத்துழைத்து வாழும் திறன் என்பதே உண்மையான வரையறை. ஒரு நிமிடம் சிந்தித்து பாருங்கள். நம்மில் எத்தனை பேர் தினசரி நிம்மதியாக உறங்குகிறோம்? எத்தனை பேர் தங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தத் தயங்கவில்லை? இந்த எளிய கேள்விகளுக்கே பதில் இல்லை என்றால், அது நம்மைச் சுற்றியுள்ள மனநல நிழல் எவ்வளவு பரவியுள்ளது என்பதை காட்டுகிறது. நாம் இன்று உடல் ஆரோக்கியத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மனதின் ஆரோக்கியத்திற்கும் கொடுக்க வேண்டும் என்ற புரிதல் இப்போது அதிகரித்து வருகிறது. இருந்தபோதிலும் நம் அன்றாட வாழ்க்கையின் சவால்களுக்கு மத்தியில் மனநலம் சார்ந்த பிரச்சினைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. இத்தகைய சவால்களை ஒரு பேரழிவு அல்லது அவசர சூழ்நிலைகளாக எதிர்கொள்ள நேரிடும்போது அதன் பாதிப்புக்கள் மிக அதிகமாகின்றன. பூமியில் ஏற்படும் எந்தவொரு நிலநடுக்கமாகவோ, வெள்ளமாகவோ அல்லது ஒரு பெரிய சமூக, பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் அவை ஏற்படுத்தும் சேதம் வெறுமனே கட்டடங்களையும், உடல்களையும் மட்டுமல்ல, அது மனிதர்களின் மனதையும், உணர்ச்சிகளையும் ஆழமாகப் பாதிக்கின்றன. இன்றும் மனநலப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது ஒரு பலவீனமாகக் கருதப்படுகிறது. ஆரம்ப நெருக்கடி காலங்களில் உயிர் பிழைப்பதே முதன்மையானது என்று மக்கள் நினைக்கும்போது மனதின் காயம் பற்றிய பேச்சுக்கள் பெரும்பாலும் பின்னோக்கித் தள்ளப்படுகின்றன. “இப்போது உயிர் பிழைத்தால் போதும், மன நலத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்” என்ற எண்ணம் நிலவுகிறது. இந்த மனப்பான்மையால் பாதிக்கப்பட்டவர்கள் உதவி கேட்கத் தயங்குவதன் காரணமாக அவை அவர்களின் மனநிலையை மேலும் மோசமாக்குகிறன.

இன்றும் சமூகத்தில் மனநலம் குறித்த பல தவறான நம்பிக்கைகள் காணப்பட்டு வருகின்றன. அதாவது மனிதனே இன்னொரு மனிதனை மனநிலை பாதிப்புக்கு ஆளாக்குவதற்கு காரணமாக அமைகின்றான். உதாரணமாக “அவன் பைத்தியம்”, “அவளுக்கு மனசு சரியில்லை”, “அது வெறும் கற்பனை!” இவ்வாறான வார்த்தைகள், மனநலப் பிரச்சினையால் வாடும் ஒருவரை இன்னும் ஆழமான இருளில் தள்ளுகின்றன. மனநலம் என்பது உடல் நலத்தின் போன்று ஒரு மருத்துவப் பிரச்சினை என்பதைக் கொண்டுணராத சமூகத்தில் பயமும்,

தொடர்ச்சி▼



# அழுத்தத்தில் வாழ்கிறோம்' வாழ்வை உணர்கிறோமா?

தொடர்ச்சி▲

வெட்கமும் காரணமாக பலர் தங்கள் வலியை மறைத்து வாழ்கின்றனர். இன்றைய இளைஞர்களின் மனநிலையை மிகவும் பாதிக்கும் ஒரு சக்தி சமூக ஊடகங்களாகும். இவை வெளிப்படையாக அனைவருக்கும் “சிரிக்கும் முகம்” காட்டினாலும் அதன் பின்னால் எத்தனை முகங்கள் அழுகின்றன என்பதைப் பலர் அறிவதில்லை. “Likes”, Followers Trends ஆகியவற்றில் தம்மை அளந்து பார்க்கும் தலைமுறையே இன்று உருவாகியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் விளைவாக தன்னம்பிக்கை குறைவு, தனிமை உணர்வு, மனஅழுத்தம், மற்றும் உறவு சிக்கல்கள் என்பன அதிகரித்துள்ளன.

இன்று இளைஞர் சமூகத்தில் அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கு முக்கிய காரணமே மன அழுத்தம் தான். இன்றைய வேகமான உலகில் இளைஞர்கள் கனவுகளின் பறவையாக பறக்க முயல்கின்றனர். ஆனால் அந்த பறவைப் பயணத்தின் நடுவே, பலரின் சிறகுகள் மனஅழுத்தம் எனும் காணாத பிணைப்பால் தடுக்கப்படுகின்றன. சமூக அழுத்தம், கல்வி போட்டி, வேலைவாய்ப்பு பற்றாக்குறை, உறவு முறிவுகள், பொருளாதார சிக்கல்கள் இவை அனைத்தும் இணைந்து இளமையின் மனதை நெருக்கடி சூழலில் தள்ளுகின்றன. இவற்றின் முடிவாக, பல இளைஞர்கள் தங்களின் வாழ்க்கை பாதையை முடிவுக்குக் கொண்டுசெல்லும் தற்கொலை எனும் மிகக் கொடிய தீர்வைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆனால் உண்மையில் இது ஒரு “தீர்வு” அல்ல. இது மனநல சிகிச்சை மற்றும் சமூகப் புரிதல் இல்லாமையின் வெளிப்பாடே ஆகும். இந்தச் சூழலில், இளைஞர்களின் தற்கொலை பிரச்சினையைப் புரிந்துகொள்ள நாம் முதலில் மனநலத்தின் அவசியம்பற்றி புரிந்து கொள்ள வேண்டும். மனநலமே ஒருவரின் வாழ்க்கையின் பாடத்தையும், நம்பிக்கையையும் தீர்மானிக்கிறது.

ஆகவே மனநலத்தை பாதுகாப்பது மருத்துவரிடம் மட்டுமல்ல, நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும். மனநலத்தைப் பற்றி திறந்த மனதுடன் பேசுவது மற்றவர்களுக்கு தைரியம் அளிக்கும். ஒரு ஊடக ஆசிரியராகவோ, சமூக செயற்பாட்டாளராகவோ அல்லது ஒரு பொதுமகனாகவோ இருந்தாலும் நாம் செய்ய வேண்டியது மனஅழுத்தத்துடன் அமைதியாக இருக்கும் உறவுகளின் குரல்களை கேட்பதே ஆகும்.

ஏனெனில் சில நேரங்களில் நாம் பேசும் வார்த்தைகளைக் கேட்பதே ஒரு உயிரை காப்பாற்றலாம். அவசர காலங்களில் ஒருவருக்கு உடல் காயம் ஏற்பட்டால் நாம் உடனே முதலுதவி செய்வது போல் மனதளவில் பாதிக்கப்பட்டவருக்கு உதவ “உளவியல் முதலுதவி” பற்றிய அடிப்படைப் பயிற்சியை பெறுவது அவசியம். இதற்கு நிபுணத்துவம் தேவையில்லை, ஆனால், ஆறுதலான வார்த்தைகள், பாதுகாப்பான சூழலை உருவாக்குதல் மற்றும் தேவைப்பட்டால் நிபுணர்களின் உதவியை நாட ஊக்குவித்தல் போன்ற எளிய ஆதரவுகளை வழங்க உதவுகிறது.

2025 ஆம் ஆண்டு உலக மனநல தினமானது நெருக்கடிகளால் சூழ்ந்த உலகில், ஒருபோதும் அலட்சியப்படுத்த முடியாத ஒரு உண்மையைக் காட்டுகிறது. மனநலம் என்பது ஒரு உலகளாவிய மனித உரிமையாகும். அதாவது ஓர் நெருக்கடியின் மத்தியில் நாம் எவ்வளவு விரைவாகவும், திறம்படவும் மனநல சேவைகளை அணுக அனுமதிக்கிறோமோ, அந்த அளவுக்கு சமூகங்கள் வேகமாகக் குணமடைந்து, மீண்டும் வலுப்பெற உதவும். பேரழிவுகள் முடிவுக்கு வரும், ஆனால் அதன் மன வடுக்கள் பல ஆண்டுகளாக நீடிக்கலாம். அந்த வடுவை ஆற்ற மனநல சேவைகளின் கதவுகள் எல்லா நேரங்களிலும், அனைவருக்கும் திறந்திருக்க வேண்டும். இந்த ஒக்ரோபர் 10 அன்று, உலகெங்கும் உள்ள பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு மனநல ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்ய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலாக மாற்ற நாம் அனைவரும் கைகோர்ப்போம்.




# மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவோம்!

பி.றொயனகுமார்,
ஊடகத்துறை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.

மனநலம் என்பது ஒரு நபரின் உணர்ச்சி, உளவியல் மற்றும் சமூக நலத்தை குறிக்கிறது. இது நாம் எவ்வாறு சிந்திக்கிறோம், உணர்கிறோம், மற்றும் நடந்து கொள்கிறோம் என்பதை பாதிக்கும் ஒரு முக்கியமான அம்சமாகும். மனநலம், குழந்தை பருவம் முதல் முதியவரை வரை, வாழ்நாள் முழுவதும் மனித வாழ்க்கையின் அனைத்து பரிமாணங்களிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் உடல்ரீதியான ஆரோக்கியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றதோ அதேபோல் உளரீதியான ஆரோக்கியமும் முக்கியத்துவம்பெற்ற ஒன்றாக கருதப்படுகின்றது. ஒரு மனிதனின் உள ஆரோக்கியம் சிறப்பான முறையில் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவன் உடலியல் ரீதியாக தனது அன்றாட செயல்பாடுகளில் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றான் என்பது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாக காணப்படுகின்றது. மனநலமான ஒருவர், வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகளுக்கு உளவியல் ரீதியாக பதிலளிக்கக்கூடிய திறனைக் கொண்டிருப்பதோடு, வேதனை, மன அழுத்தம், சோகம் போன்ற உணர்வுகளை சமாளிக்கவும், தொடர்புகளை பராமரிக்கவும், அர்த்தமுள்ள முடிவுகளை எடுக்கவும் திறமையாக இருக்கிறார்.

பல்வேறு வழிகளிலும் பல்வேறு தொழில்நுட்ப வளர்ச்சியின் ஊடாகவும் வளர்ந்து கொண்டு செல்கின்ற இன்றைய சமுதாயத்தை பொறுத்தவரையில் அதிகளவிலான உளரீதியான ஆரோக்கியம் இன்றி தனது வாழ்க்கையை கொண்டு செல்கின்றமையை எம்மால் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. பொதுவாக தொழில்துறையில் ஈடுபட்டு வரக்கூடியவர்கள் அதிகளவிலான மன அழுத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டு காணப்படுவதோடு அவர்களின் வாழ்க்கை முறையும் சமநிலையற்றதாக காணப்படுகின்றது. எனவே இன்றைய காலப் பகுதியில் உள நலனை பற்றி பேச வேண்டியது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். இதன் அடிப்படையிலேயே உலக உளநல தினமானது ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலகம் முழுவதும் மனநலம் என்பது முக்கியமான ஒரு ஆரோக்கிய அம்சமாக பரிசீலிக்கப்படுகிறது. உடல்நலத்தைப் போலவே, மனநலமும் ஒரு நபரின் வாழ்க்கைத் தரத்தை தீர்மானிக்கும் முக்கியமான கருவியாகும். இந்த உணர்வை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் நோக்கத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 10 ஆம் திகதி உலக மனநல தினம் (World Mental Health Day) அனுசரிக்கப்படுகிறது. இது 1992 ஆம் ஆண்டு, World Federation for Mental u;ealth (WFMu;) என்ற அமைப்பால் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த தினத்தின் முக்கிய நோக்கம், மக்களுக்கு மனநலத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே. மனநல சிக்கல்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான வழிகளும் பற்றி பேசும் சமுதாய சூழலை உருவாக்குவது முக்கிய நோக்கமாகும். மனநல பிரச்சனைகள் குறித்து மக்கள் மத்தியில் இருக்கும் தவறான கருத்துக்களை மாற்றுவதோடு, மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான பரிவும், புரிதலும் ஏற்படவேண்டும் என்பதையும் இது வலியுறுத்துகிறது.

உலக மனநல தினம் ஒவ்வொரு ஆண்டும் மாறுபடும் கருப்பொருளுடன் (theme) கொண்டாடப்படுகிறது. அந்த ஆண்டின் மனநல சிக்கல்களின் தேவைகள் மற்றும் உலகளாவிய சூழ்நிலைகளைப் பொருத்து அந்த கருப்பொருள் தேர்வு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, சமீபத்திய ஆண்டுகளில் “Mental u;ealth in an Unequal World”, “Mental u;ealth for All” போன்ற கருப்பொருள்கள் இடம்பிடித்துள்ளன. இது மனநலத்தை அனைத்து சமூக அடுக்குகளுக்கும் சமமாகக் கொண்டுசெல்லும் முயற்சியாகும்.

இன்றைய காலத்தில் மன அழுத்தம், பணி அழுத்தம், தனிமை, குடும்பப் பிரச்சினைகள் போன்றவை அதிகரித்துவரும் சூழலில், இந்த தினத்தின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிறது. மாணவர்கள், தொழிலாளர், பெற்றோர், முதியவர்கள் என எல்லா தரப்பினரும் மன அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில், மனநலத்துக்கான உதவிகள், ஆலோசனைகள், மற்றும் சமூக ஆதரவு மிகவும் தேவையாக இருக்கிறது.இந்த நாளில் உலகம் முழுவதும் பல்வேறு அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அமைப்புகள் இணைந்து கருத்தரங்குகள், ஊடக நிகழ்ச்சிகள், ஆலோசனை முகாம்கள் போன்றவை நடத்துகின்றன. இது மக்களுக்கு மனநலம் குறித்த புரிதலை வளர்க்க உதவுகிறது. மேலும், மனநல சிகிச்சை மற்றும் ஆலோசனை பெறும் திறனை அதிகரிக்கவும், மனநலத்தை சமூக உரையாடல்களில் நிலைநாட்டவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது.

ஆரம்ப காலங்களில் உலக மனநல தினம் அதாவது 1992 ஆம் ஆண்டு முதல் உலகளவில் அனுசரிக்கப்பட தொடங்கியது. இதற்குப் பின்னணியாக இருந்தது World Federation for Mental Health (WFஆர்)

தொடர்ச்சி▼




# மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவோம்!

தொடர்ச்சி▲

என்ற அமைப்பின் மனநல விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கம். ஆரம்ப காலங்களில், இந்த தினம் மிக எளிமையாகவும், தகவல் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் பிரசுரங்களை அடிப்படையாகக் கொண்டும் கொண்டாடப்பட்டது. முதல் ஆண்டுகளில், ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் (theme) இல்லாமல், பொதுவான விழிப்புணர்வு நோக்கத்துடன் நிகழ்வுகள் நடத்தியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, 1994 ஆம் ஆண்டில்தான் முதன்முதலில் “Improving the Quality of Mental Health Services throughout the World” என்ற கருப்பொருளுடன் தினம் அனுசரிக்கப்பட்டது.

இந்த தொடக்க நாள்களில், மனநலம் குறித்து பேசுவது கூட ஒரு சமூகமாகக் கடுமையான முடிவாகவே இருந்தது. பல சமூகங்களில் மனநல சிக்கல்கள் குறித்து திறந்த முறையில் பேச முடியாத சூழ்நிலை காணப்பட்டது. இதனால், றுகுஆர் அமைப்பு மற்றும் அதன் இணைப்புகள், அறிவுரை அளிக்கும் செய்தித்தாள்கள், தொலைக்காட்சித் தொகுப்புகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் மூலம் மக்களிடம் மனநலத்தின் அவசியத்தை கொண்டு சேர்க்க முயற்சி செய்தன. பல்வேறு நாடுகளில் உள்ள மருத்துவ மையங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொது மக்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும் சிறிய முகாம்கள், கருத்தரங்குகள், உரையாடல் நிகழ்ச்சிகள் மற்றும் உள்ளூர் ஊடகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தன.

இது தவிர, சில நாடுகளில் பாடசாலைகளிலும் மாணவர்களுக்கான மனநலம் தொடர்பான அறிவுரை, விளக்க வகுப்புகள், மற்றும் விளையாட்டுத் தொடர்களின் வாயிலாக மன அழுத்த முகாமைகள் நடத்தப்பட்டன. ஆரம்ப காலங்களில் மனநல தினம் தனியார் மற்றும் சுயாதீன அமைப்புகளின் முயற்சிகளால் முன்னெடுக்கப்பட்டது. இன்றைய வேகமான, மாற்றமடைந்த வாழ்க்கை முறை மனிதர்களின் மனநலத்தை பெரிதும் பாதிக்கக்கூடியதாக உள்ள சூழலில், உலக மனநல தினம் (World Mental Health Day) ஒரு முக்கியமான விழிப்புணர்வு நாளாக மாறியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி அனுசரிக்கப்படும் இந்த நாள், கடந்த காலங்களை விட இப்போது மிகச்சிறந்த முறையில், பரந்த அளவில், தொழில்நுட்ப மற்றும் சமூக ஊடகங்களின் வாயிலாக மக்களை மனநலத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வுக்கு கொண்டு செல்கிறது.

இன்றைய காலகட்டத்தில், மனநல தினம் பல்வேறு கருப்பொருள்களுடன் கொண்டாடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, சமீப ஆண்டுகளில் “Make mental health & well-being for all a global priority” மற்றும் “Mental health in an unequal world” போன்ற கருப்பொருள்கள் உலகெங்கும் பேசப்பட்டன. இவை சமுதாயத்தில் உள்ள சமத்துவமற்ற நிலைகள், மனநல சேவைகளில் அணுகல் பற்றாக்குறை, மற்றும் சூழலியல் தாக்கங்கள் குறித்து உரையாடல்களை தூண்டியவையாக இருந்தன. இப்போது, உலக நாடுகள் இதனை அரசியல் மட்டத்திலும், கல்வி, வேலைத்துறைகள், மருத்துவம், மீடியா போன்ற அனைத்து துறைகளிலும் நுட்பமான நிகழ்வுகள், கருத்தரங்குகள், ஆன்லைன் பேனல்கள், தன்னலமற்ற சேவைகள் ஆகியவற்றின் வாயிலாக முன்னெடுத்து வருகின்றன. மனநல ஆலோசனைகள், தொலைநோக்கு கலந்துரையாடல்கள், பிரபலங்களின் கருத்து பகிர்வுகள், மற்றும் சமூக ஊடகங்களில் WorldMental HealthDay போன்ற பயணங்கள் இவற்றின் ஒரு பகுதி.

பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்காக மனநல முகாம்கள், அழுத்த மேலாண்மை பயிற்சிகள், மனநலம் தொடர்பான கருத்தரங்குகள் போன்றவை ஏற்பாடு செய்யப்படுகின்றன. வேலைவாய்ப்பு இடங்களில் பணியாளர்களுக்கு Workplace mental wellness programs ஊக்குவிக்கப்படுகின்றன. இவை மூலம், மனநலம் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை உரையாடல்களில் இடம் பெறத் தொடங்கியுள்ளது. எதிர்கால தேவைப்பாடுகள் மிக விரிவானதாகவும் தீவிரமாகவும் காணப்படும். அதிகப்படியான சமூக வன்முறை, சில்லறை தொழிலாளர்கள், சமூக ஊடக துஷ்பயோகம், தொழில்நுட்ப ஓட்டம் ஆகியவையால் மனநல சிக்கல்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அதனை சமாளிக்க, மனநல சேவைகள் எளிமையான முறையில், எல்லோருக்கும் கிடைக்கத்தக்கவையாக இருக்க வேண்டும். மேலும், மனநலக் கல்வி பள்ளிப் பருவத்திலேயே உள்ளடக்கப்பட வேண்டியுள்ளது.

முன்னேற்றப்பட்ட செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் தளங்கள் போன்றவற்றை மனநல ஆதரவுக்காக பயன்படுத்தும் முயற்சிகள் அதிகரிக்கும். கிராமப்புற மக்கள், பன்முக அடையாளங்கள் கொண்ட நபர்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைவரும் மனநல ஆதரவை சமமாக பெறக்கூடிய அனைவருக்கும் தனிப்பயன் சேவைகள் உருவாக வேண்டிய அவசியம் உள்ளது. எனவே உலக மனநல தினம் இப்போது பல்வேறு தளங்களில் பரவலாக பேசப்படும் ஒரு சமூக நகர்வாக மாறியுள்ளது. எதிர்காலத்தில் இது இன்னும் பல பரிமாணங்களில், ஆழமான நுட்பங்களோடு வளர வேண்டிய தேவை உள்ளது. மனநலத்தின் மேன்மையைப் புரிந்து கொண்டு, அதை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஒவ்வொருவரும் எடுக்கும் ஒரு சமூகத்துக்கான வழிகாட்டி நாளாக உலக மனநல தினம் தொடர்ந்து விளங்கும்.

இவ்வாறான வகையில் உலக மனநல நிலை தினமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. உடல் நலத்தைப் போலவே ஒவ்வொருவரும் தனது உள நலத்தையும் மேம்படுத்த வேண்டியது கட்டாயக் கடமையாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# திரிவைத்தகுளம் காணி ஆக்கிரமிப்பு தொடர்பில் மொட்டுவின் அமைப்பாளரால் கொலை மிரட்டல்

## த.தே.ம.முன்னணி அமைப்பாளர் பொலிஸில் முறைப்பாடு

(கி.வசந்தன்)

திரிவைத்தகுளம் காணி ஆக்கிரமிப்பு தொடர்பில் வெளிப்படுத்தியமைக்காக மொட்டுக் கட்சியின் அமைப்பாளரால் தமக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இன்று நேற்று முறைப்பாடு செய்த பின் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் திரிவைத்தகுளம் என்னும் கிராமம் போகஸ்வேவ குடியேற்றவாசிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. அந்த விடயங்களை நாங்கள் கடந்த ஜூலை மாதம் கள விஜயம் செய்து ஊடகங்கள் வாயிலாக வெளிக் கொண்டு வந்திருந்தோம். காணி உரிமையாளர்கள ஒலுமடுவில் இருக்கிறார்கள். அவர்கள் காணியை வெளியாக்கிய போது அவர்கள் மீது வனஇலாகா திணைக்களம் வழக்கு தாக்கல் செய்து மூன்று வருடங்கள் வழக்கு இடம்பெற்று தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தான் போகஸ்வேவ குடியேற்றவாசிகளால் குறிப்பாக மஹிந்தவின் மொட்டுக் கட்சியின் அமைப்பாளராக இருக்கின்ற பிமல் தர்மராஜா குழுவினரால் டோசர் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்களை ஊடகங்கள் மூலம் நாம் வெளியில் கொண்டு வந்திருந்தோம்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி அந்த இடங்களைப் பார்வையிட வன்னியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்தனர். அந்த இடத்திற்கு வருகை தநத காணியை ஆககிரமித்துள்ள பிமல் தர்மராஜா போன்ற குழுவினர் அங்கு வருகை தந்தவர்களை பார்த்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமையுடன், என்னுடைய பெயரையும், பிரதேச சபை உறுப்பினர் தமிழ் செல்வனது பெயரையும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனினது பெயரையும் குறிப்பிட்டு அவர்கள் இங்கு இருக்கிறர்களா, அவர்களை வெட்டுவதற்காக, அவர்களை கொலை செய்யத் தான் வந்தோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கத்திற்கு முன்னால் தெரிவித்திருந்தார்கள். அச்சுறுத்துகின்ற மற்றும் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் கணொளிகளாக உள்ளன.

அந்தப்பகுதி போகஸ்வேவ பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும் அந்த அச்சுறுத்தலுக்கு எதிராக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு வருகைதந்து முறைப்பாட்டை வழங்கியுள்ளோம். அவர்கள் நேரடியாக போகஸ்வேவ பொலிஸ்நிலையம்ஊடாகஇதனைஅணுகுவதற்காக இநத விசாரணையை மேற்கொள்ளுமாறு அந்த அதிகாரிக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவுறுத்தியுள்ளார். நாங்கள வாக்கு மூலம் வழங்கியுள்ளோம்.

எமது நிலங்கை அரச திணைக்களஉடன் இணைந்து ஆக்கிரமித்து 210 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துள்ளார்கள். காணி உரிமையாளர்கள் போவதற்கு தடை போடும் திணைக்களங்கள் குடியேற்ற சிங்களவர்கள் துப்பரவு செய்து அபகரிக்கும் போது பேசாமல் இருக்கிறார்கள். இனிவரும் காலங்களில் எவ்வாறான அச்சுறுத்தல் வந்தாலும் திரிவைத்த குளம் தமிழர் காணிகளை மீட்கத் தொடர்ந்து போராடுவோம். – எனத் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பு கைவேலியில் விபத்தில் இளைஞர் படுகாயம்



(பூ.லின்ரன்)

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் நேற்றிரவு 7:30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

பலத்த காயமடைந்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிக்க முயன்ற வாகனத்தின் உரிமையாளர் வாகனத்துடன் நகரவாசிகளால் பிடிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்






# மன்னாரில் உரிய அனுமதியின்றி இயங்கி வந்த தனியார் தங்கும் விடுதிக்கு சிவப்பு அறிவித்தல்!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் சின்னக்கடை பகுதியில் எவ்வித அனுமதியும் இன்றி இயங்கி வருவதாகக் கூறப்படும் தனியார் விடுதி ஒன்றுக்கு நேற்றைய தினம் வியாழக் கிழமை மன்னார் நகர சபையினால் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தலைமையிலான குழுவினர் அந்த விடுதிக்குச் சென்று அதனைப் பார்வையிட்டனர்.

இதன் போது எவ்வித அனுமதியும் இன்றி விடுதி அமைக்கப்பட்டு இயங்கி வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அனுமதியற்ற கட்டடம் தொடர்பில் உரிய ஆவணங்களை எதிர்வரும் 14 தினங்களுக்குள் மன்னார் நகர சபையில் சமர்ப்பிக்கக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அந்தத் தினத்திற்குள் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க படாத நிலையில் அந்தக் கட்டடம் அனுமதியற்ற கட்டடம் எனக் கருதி நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாகவும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திற்கு அமைவாகவும், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த கட்டடம் இடித்து அகற்றப்படும் என என மன்னார் நகர சபை அறிவித்துள்ளது.


இந்த விடயம் தொடர்பாக சிவப்பு அறிவித்தல் அந்த விடுதியின் நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் நகர சபை பிரிவில் பல்வேறு தனியார் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ள போதும் அந்தத் தனியார் விடுதிகள் பல எவ்வித கண்காணிப்புகளும் இன்றி காணப்படுவதனால் பல்வேறு சமூகச் சீரழிவுகள் இடம் பெற்று வருகின்றன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே மன்னார் நகர சபை பிரிவில் உள்ள தனியார் விடுதிகள் தொடர்பில் மன்னார் நகர சபை துரித கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






நகராட்சி மன்றம் - மன்னார்
URBAN COUNCIL - MANNAR

சிவப்பு அறிவித்தல்

அனுமதியற்ற கட்டடம்

Chairman | Secretary | Accountant | Fax | E mail

# இவ்வாறு போனால் 2028 ஆம் ஆண்டிலும் கூட கடனை மீளச் செலுத்த முடியாமலேயே இருக்கும்

## நேரத்துடன் எச்சரிக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ




இவ்வாறு போனால், 2028 ஆம் ஆண்டுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வது பெரும் சவாலாக அமையும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கின்றார். நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில், புதிய கடன் மறுசீரமைப்பின் கீழ் புதிய நிபந்தனைகளுடன் கூடிய சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் எட்டப்படும் என்று கூறப்பட்டிருந்தாலும், அது முன்னெடுக்கப்படாது, முந்தைய அரசாங்கத்தின் இணக்கப்பாடு அதே வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது போன்ற இன்னும் பல விடயங்கள் "வளமான நாடு – அழகான வாழ்க்கை" எனும் கொள்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தால் குறைப்போம், ரூ.9000 கட்டணத்தை ரூ.6000 ஆகவும், ரூ.3000 கட்டணத்தை ரூ.2000 ஆகவும் குறைத்து நிவாரணம் வழங்குவதாகச் சொன்னாலும் அது எதுவும் நடக்கவில்லை. மின்சாரக் கட்டணத்தை 15 வீதம் குறைத்தனர். இப்போது மீண்டும் 6.8 வீதத்தால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கப் போகின்றனர். செலவுகளைச் சரியாகக் கணக்கிடாமலே இவ்வாறு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் 159 பெரும்பான்மையை வைத்துக் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடுவது ஏன் என்பதில் எமக்கு பிரச்சினை காணப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடாமல், மாற்றத்தை வேண்டியே, தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைத்துப் பெரும் மக்கள் ஆணையைப் பெற்றுத் தந்தனர். 2028 முதல் நாம் ரூ. 5 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

நமது நாட்டின் முதலீட்டுச் சூழலில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கூறுகிறது. கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவது, நிறுவன மற்றும் அதிகாரிகள் மற்றும் அதிகாரத்துவ தோல்வி, ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தொடர்பில் முன்கூட்டியே கணிக்க இயலாமை, வெளிப்படைத்தன்மையில் காணப்படும் பிரச்சினைகள், கட்டமைப்பு சார் பிரச்சினைகள், அரச நிறுவனங்கள் தொடர்பான பாரதூரமான பிரச்சினைகள் என குறிப்பிட்டு முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன அதில் கூறப்பட்டுள்ளன. நமது நாட்டின் ஆடை ஏற்றுமதிக்கான மிகப்பெரிய சந்தை வாய்ப்பைக் கொண்ட அமெரிக்கா கூட இப்போது இதைச் சொல்கிறது.

நாட்டில் வறுமை அதிகரித்துள்ளது.?–

உலக வங்கியின் அறிக்கையின் படி, நமது நாட்டில் வறுமை மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றன. வறுமை அதிர்வுகள் உருவாகி, 2019 உடன் ஒப்பிடும்போது உண்மையான ஊதியங்களும் தொழிலாளர் படை பங்கேற்பும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. ஒரு வீட்டலகின் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல், வேலைவாய்ப்பு உருவாக்கம் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றன. ஊட்டச்சத்து குறைபாடு உயர் மட்டத்தில் காணப்படுகின்றது, உணவு பண்டங்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன என்று உலக வங்கி கூறுகிறது. செல்வந்த குடும்பங்களை விட வறிய குடும்பங்கள் மூன்று மடங்கு அதிகமாக உணவுக்காகச் செலவிடுகின்றன. வறுமைக் கோட்டிற்கு உள்ளேயும், அதற்கு அண்மித்த நிலையில் ஏராளமான மக்களும் காணப்படுகின்றனர் என்று உலக வங்கி குறிப்பிடும் போது, நமது நாட்டில் 50 வீதனானோர் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர் என்று ஏழ்மை அள்ளீட்டுக்கான மத்திய நிலையம் குறிப்பிடுகின்றது.

2028 இல் நாடு எப்படிக் கடனைத் திருப்பிச் செலுத்தப் போகின்றது?

இத்தகைய சூழ்நிலைக்கு மத்தியில், நமது நாடு திருப்திப்படக் கூடிய நேரடி அந்நிய முதலீட்டைப் பெறுகிறதா, புதிய தொழில்முயற்சிகளை உருவாக்குகின்றதா, வேலையின்மை விகிதத்தைக் குறைக்கின்றதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மக்களின் கைகளில் பணப்புழக்கம் அதிகரித்து வருகிறதா? வறுமையை ஒழிக்க சரியான வேலைத்திட்டம் காணப்படுகின்றதா? என்ற விடயங்களைப் பார்க்கும்போது, 2028 ஆம் ஆண்டில் ஆண்டுதோறும் 5 பில்லியன் டொலர் கடன் தொகையை திருப்பிச் செலுத்த பல சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது தெளிவாகின்றது.

ஜெனீவா தீர்மானத்தின் மீது நடத்தப்பட்ட விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் போது, 47 நாடுகளில் 43 நாடுகள் நமது நாட்டின் அரச கொள்கை குறித்து நேர்மறையாகப் பேசின என தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு சாதகமாக பேசினால், ஒரு நாடாக எம்மால் முன்வைக்கப்பட்ட திட்டத்தை எதிர்த்திருந்தால், எங்களுக்கு சாதகமாகப் பேசிய 43 நாடுகளின் வாக்குகளை எமக்கு சாதகமாக பெற முடியாமல் போனது ஏன்?

ஜெனீவாவில் எங்களுக்கு ஆதரவான 43 நாடுகளின் வாக்குகளைப் பெற முடியாமல் போனதற்கான காரணம் தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த 47 நாடுகளில் 43 நாடுகள் நமக்கு ஆதரவாக இருந்தால், அந்நாடுகளை எமக்கு ஆதரவான வாக்குகளாக மாற்ற முடியாமல் போனமை பிரச்சினைக்குரிய விடயமாகும். இது நமது நாட்டின் இராஜதந்திரக் கொள்கையில் காணப்படும் ஓர் பலவீனமாகும். 2009 யுத்த வெற்றியைத் தொடர்ந்து இலங்கையால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை வெல்ல முடிந்தது. அன்று, எமக்கு ஆதரவாக 29 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் கிடைத்தன. இதற்கான முக்கிய காரணம் வெற்றிகரமான மற்றும் வலுவான இராஜதந்திர தலையீடு காணப்பட்டமையாகும். மனித உரிமைகள் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த கலாநிதி தயான் ஜயதிலக, தனியாக 29 வாக்குகளைத் திரட்டினார். இப்போது நடந்திருப்பது கடுமையானதொரு பிரச்சனையாகும்.

எனவே, இந்த தருணத்திலாவது கூட, இந்தத் தோல்வியில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, ஒரு நாடாக, இன, மத, நிறம், சாதி, வர்க்க மற்றும் கட்சி வேறுபாடுகளை களைந்து, முற்போக்கு தேசியவாதத்தை, இலங்கையர் என்ற அடையாளத்தை எமது பக்க பலமாக மாற்றி, அனைவரும் ஒன்றாய் இணைந்து, ஒரு தாய் பிள்ளைகள் போல, நல்லிணக்கம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், ஒற்றுமை என்பவற்றை வலிமையாகக் கொண்டு, நாட்டின் பிரச்சினைகளை நாட்டிற்குள்ளேயே தீர்த்துக் கொண்டு, இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண வேண்டும். உள்நாட்டில் நல்லிணக்க செயல்முறை முறையாக முன்னெடுத்தால், வருடாந்தம் ஜெனீவா செல்லும் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும். – என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# தகிக்கின்ற முல்லைத்தீவை தணிக்கும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வாருங்கள்!

## நாடாளுமன்றில் ரவிகரன் எம்.பி. கோரிக்கை

(விஜயரத்தினம் சரவணன்)

நிலஉரிமைக்கான போராட்டம், நினைவேந்தல் மற்றும் வழிபாட்டு உரிமைகளுக்கான போராட்டம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரும் போராட்டம் என கடந்தகால அரசாங்கங்கள் முல்லைத்தீவை தொடர் போராட்டங்களால் தகிக்கத்தக்கவாறு கையாண்டன எனச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறு போராட்டங்களால் தகித்துக் கிடக்கின்ற முல்லைத்தீவை தணிக்கத்தக்கவாறு அநுர அரசு செயற்படவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவரால் முல்லைத்தீவு மாவட்டத்தின் சுற்றுலாத்துறை மேம்பாடு சார்ந்த ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையிலே மிகவும் மோசமாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு - பௌத்தமயமாக்கலுக்கு உட்படுகின்ற மாவட்டங்களில் முதலாவதாகவும் அபிவிருத்தியிலே கடைசிநிலையில் தொடர்ந்தும் தக்கவைக்கப்படும் மாவட்டமாகவும் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நான்.

படையினரை அதிகம் கொண்ட இந்த மாவட்டத்தில்தான் காடுகளுக்குள்ளும் ஆற்றங்கரைகளிலும் சட்டவிரோதமாக மணல் களவாடப்பட்டு எமது நிலம் சூறையாடப்படுகிறது.

காடுகள் பாதுகாக்கப்பட்டு, சூழலியல் சுற்றுலா நடைமுறைப்படுத்தப்படும் இதே தீவிலேதான் இன்றும் எம் காடுகள் அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக வேரறுக்கப்படுகின்றன.

சொந்த நிலத்தில் பயிரிடப் போகும் தமிழர்களை வழக்குகள் போட்டு சிறைப்படுத்தும் வனவளத்திணைக்களம், சட்டவிரோத காடழிப்பிலும் மணல் கொள்ளையிலும் வாய் மூடி மௌனம் காக்கிறது.

காலாகாலமாக பௌத்தமயமாக்கலில் மட்டும் கரிசனை கொண்ட அரசுகளில் இருந்து இவ்வரசு சற்று அபிவிருத்தியிலும் முல்லைத்தீவைக் கருதுகிறது.

இவ்வாண்டுக்கான வெட்டுவாய்க்கால் பாலக்கட்டுமானம், சாலைகள் மேம்பாடு, அடுத்தாண்டில் தொடங்கவுள்ள கொக்கிளாய் - புல்மோட்டை பால கட்டுமானம் என எங்களின் கோரல்களை நீங்கள் கருத்தில் கொள்வதை வரவேற்றுக் கொள்கிறோம்.

எனினும், இன்னமும் உங்களால் எங்கள் மாவட்டத்தில் கவனிப்படாத பக்கங்கள் எண்ணிறந்தவை!



இறுதிப்போரில் பேரிழப்பை உயிரிலும் உடைமையிலும் அங்கங்களிலும் தாங்கி வாழும் முல்லைத்தீவு, நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை என நாவகை நிலங்களையும் கொண்ட எழில் நிறைந்த மாவட்டம்.

போருக்குப் பின்னரான அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இம்மாவட்டத்தில் பசுமை நிறைந்த இயற்கை, நீர்நிலைகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், பண்பாட்டு வளங்களென முல்லைத்தீவின் இயற்கை வனப்பு இம்மாவட்டத்தை ஒரு சிறந்த சுற்றுலாத் தளமாக மாற்றும் திறன் கொண்டன.

இருப்பினும் கவன ஈர்ப்புக்கு அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை, சந்தைப்படுத்தலில் உள்ள சவால், பாதுகாப்பு மற்றும் கண்ணிவெடி சார்ந்த பிரச்சினைகள், வடக்கும் தெற்கும் கொள்ளும் போர் சார்ந்த முரண் மனப்பாங்கு, உள்நாட்டு - வெளிநாட்டு முதலீட்டாளர்களின் குன்றிய முதலீடுகள் உள்ளிட்டவை சவாலாகின்றன.

இயற்கை வனப்போடு இணைந்த சுற்றுலாத் தளங்களுக்கான வாய்ப்புகள் இங்கு நிறைவாக உள்ள நிலையிலும் அவற்றை அணுகுவதற்கு ஏற்ற போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன.

பல சுற்றுலாத் தளங்களுக்கு பொதுப் போக்குவரத்து இல்லை.

உணவகங்கள், கழிவறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை.

முக்கிய சுற்றுலா இடங்கள் பற்றிய காட்சிப்படுத்தல்கள் சார்ந்த பன்னாட்டு ஊடகப்படுத்தல் இல்லை.

தன்னார்வலர்களின் முக்கிய குறிப்புகளைத் தாண்டி அரசின் சிரத்தை ஆக்கபூர்வமானதாக இங்கு இல்லை.

சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு உட்கட்டமைப்பு இல்லை.

தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு மையத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான அறிக்கைக்கு அமைவாக இலங்கையில் அதிகூடிய வெடிபொருள்களைக் கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இன்னமும் அகற்றப்படாதுள்ள இடங்கள் மிகவும் விரைவாக அகற்றப்படுவதையும் மக்களின் பாதுகாப்பான நடமாடுகையையும் அரசு உறுதி செய்தல் வேண்டும்.

விடுதலைப் புலிகள் பயன்படுத்திய நீர்மூழ்கி வாகனங்கள், போர் வெற்றி நினைவுச் சின்னங்களை பார்வைக்கு வைத்திருக்கும் அரசு, பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கூடி அஞ்சலிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான தளத்தை அமைப்பதற்கான அனுமதியைத் தர முன்வரவில்லை.

உங்களின் போர் வெற்றிச்சின்னங்களை இங்குள்ள எந்தவொரு ஈழத் தமிழரும் பார்க்க வருவதும் இல்லை. பார்த்து வியப்பதும் இல்லை. எங்கள் மீது நடாத்தப்பட்ட இனப்படுகொலையை தாங்கியே அச்சின்னங்கள் காணப்படுகின்றன.

பதினைந்து ஆண்டுகள் கடந்தும் இன்றளவும் இங்குள்ள மக்கள் போரா

தொடர்ச்சி▼

# தகிக்கின்ற முல்லைத்தீவை தணிக்கும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வாருங்கள்!

## நாடாளுமன்றில் ரவிகரன் எம்.பி. கோரிக்கை

தொடர்ச்சி▲

டுகிறார்கள். தங்கள் நிலத்துக்கும் வழிபாட்டு உரிமைக்கும் உங்களால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் போராடுகிறார்கள். தொடர்ந்தும் தகிக்கின்றவாறு இந்த மண்ணை நீங்கள் கையாள்வதால் தான் இங்குள்ள பாதுகாப்புநிலை மீது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அச்சம் கொள்கின்றனர். முல்லைத்தீவில் முதலிடத் தயங்குகின்றனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மீளாய்விலுள்ள 2024 இன் வருடாந்த புள்ளிவிவரவியல் அறிக்கையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 38.07 வீதத்தால் அதிகரித்துள்ளமையை அறியமுடிகிறது. இவ்வறிக்கையில் மாகாணங்களுக்கு இடையிலான சுற்றுலாப்பரம்பலின் கடுமையான சமமற்ற நிலையும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மாகாணங்களுக்கு இடையில் சுற்றுலாப்பயணிகளின் பாய்ச்சலை கணக்கிடுதல் கடினம் எனினும் சுற்றுலா தங்குமிடங்களின் பரவலின் அடிப்படையில் தீவின் மொத்த சுற்றுலா தங்குமிடங்களின் 36 வீதம் மேல் மாகாணத்திலும் 25.5 வீதம் தென்மாகாணத்திலும் 2 சதவீதத்தை அண்மிக்கும் தங்குமிடங்கள் வடமாகாணத்திலும் காணப்படுகின்றமையை இனங்காண முடிகிறது.

மாவட்டங்கள் வாரியாக அதிகூடிய சுற்றுலா விடுதிகள் 20 வீதம் ஆக கொழும்பிலும் அதிகுறைந்ததாக வன்னி மாவட்டமும் காணப்படுகிறது.

ஒட்டுமொத்த சுற்றுலா விடுதிகளில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி 0.1 வீதம், மன்னார் 0.08 வீதம், வவுனியா 0.2 வீதம், யாழ்ப்பாணம் 1.3 வீதத்தையும் கொண்டுள்ளன.

வன்னி மாவட்டத்தின் பின்னடைவுக்கு போர்ச்சூழல் காரணமாகக் கூறப்பட்டாலும் பதினைந்து ஆண்டுகாலமாகவும் மீண்டு எழ இயலாத அளவில் காணப்படுவதற்கு போர்ச்சூழல் காரணமல்ல.

இராணுவ அடக்குமுறைக்கும் பௌத்தமயமாக்கலுக்கும் கொடுக்கும் முன்னுரிமையை மாறி வரும் ஒவ்வோர் அரசும் வன்னிமண்ணுக்கான அபிவிருத்தியில் காட்டவில்லை.

சட்டவிரோத குடியேற்றங்களையும் காணி அபகரிப்பையும் மிகவும் விரைவாக மேற்கொள்ள இயன்ற அரசுகளுக்கு உட்கட்டமைப்பை விரைவாக ஏற்படுத்த முடியவில்லை.

முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் இன்னமும் பல வழிகளில சுற்றுலா வாய்ப்புகளை மேம்படுத்த இயலும் என்பதையே அரசின் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பயன்படுத்தப்படாத இடங்களில் சுற்றுலா விருத்திக்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

மூலோபாய முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமநிலையான, சமூக உள்ளீர்ப்புடனான சுற்றுலாத் துறையை மிகவும் சிறப்பாக விருத்தி செய்யலாம்.

காடுகள்,விலங்குகள், பறவைகளைச் செறிவாகக் கொண்ட முல்லைத்தீவில் சூழலியல் சுற்றுலாக்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்துங்கள்.

கைவினைப் பொருள்கள், பன்னம், நெசவு, நாட்டுணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் கைத்தொழில் பூங்காவுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துங்கள்.

தொன்மையான இடங்களில் எல்லாம் அத்துமீறி அதிகார முறைகேட்டில் புத்தர் சிலைகளை நிறுவ முயன்றும் நிறுவியும் இன நல்லிணக்க கேட்டை விதைப்பதற்கு மாற்றாக, இங்கு அகழ்வாராய்ச்சி மற்றும் பாரம்பரிய சுற்றுலாக்கான வாய்ப்புகளை உருவாக்குங்கள்.

நந்திக்கடல், முல்லைத்தீவின் பேரடையாளம்! களப்பின் பகுதியை ஆழமாக்கி மீன்பிடியை ஊக்குவிப்பதோடு சிறுபடகுச் சேவைகள் அடங்கிய சுற்றுலா வாய்ப்புகளையும் ஏற்படுத்தலாம்.

அழகான உள்ளூர்க்குளங்கள், மரங்களை மையமாகக் கொண்டு வனவள ஓய்வகத் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

பழம்பெரும் ஆலயங்களை இணைத்து பக்திச் சுற்றுலாக்கான வாய்ப்பை ஏற்படுத்தல்.

கொக்கிளாய் பறவைகள் சரணாலயம்,புளியமுனை, சின்னாறு, தேராவில் குளங்களிலான சிறுபடகுச் சேவை, புலிபாய்ந்த கல், முள்ளிவாய்க்கால் ஆழிவனம், ஒட்டுசுட்டான் வாவெட்டி மலை, முறிகண்டி, கற்சிலைமடு பண்டார வன்னியன் மணிமண்டபம், புதுக்குடியிருப்பு அட்டைக்குளம், மருதங்குளம் மற்றும் யோகபுரம் குளங்களை அண்மித்த சுற்றுலா முயற்சிகள், மாந்தை கிழக்கு வவுனிக்குள சூழலியல் முற்றம் என்பவற்றை மேலும் மேம்படுத்தலாம்.

சுற்றுலா தகவல் மையத்தை கட்டமைத்து சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை என்பன இணைந்து மாவட்டச் செயலகத்தின் பொறுப்பில் மாவட்டத்திற்கான பெருந்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி அடுத்துவரும் ஐந்தாண்டுக்கான சுற்றுலா விருத்தித் திட்டத்தை நெறிப்படுத்தலாம்.

தற்போது 0.1 வீதமாக இருக்கும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் அடங்கலான வன்னிமாவட்டத்தின் சுற்றுலா வாய்ப்பை அடுத்து வரும் ஐந்தாண்டில் எத்தனை சதவீதத்திற்கு கொண்டு வரப்போகிறீர்கள் என அளவிடக்கூடிய திட்டமிடல் ஒன்றை தயாரியுங்கள்.

இங்கே சாத்தியப்படும் வகையில் சமூக அடிப்படையிலான சுற்றுலா முறையை ஊக்குவியுங்கள்.

பரந்த அளவிலான சுற்றுலா தரவுத்தளம் ஒன்றை உருவாக்கி அதனை முறையாக ஊடகப்படுத்துங்கள்.

உட்கட்டமைப்பு விருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வன்னி மாவட்டத்திற்கு அரசளவிலும் பன்னாட்டு நிறுவனங்கள் வாயிலாகவும் அதிகப்படியான நிதி ஒதுக்கீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துங்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் வறுமை மற்றும் புறக்கணிப்பின் சிதைவுகளில் இருந்து மீள முடியும். அதன்வழி, சுற்றுலா என்பது ஒரு வலுவான கருவி. ஏனைய மாவட்டங்களைப் போல முல்லைத்தீவையும் சுற்றுலாவில் மேம்படுத்தும் பொறுப்பு எம் எல்லோரையும் சார்ந்தது.

வாய்க்கின்ற இடங்களில் எல்லாம் பௌத்த அடையாளங்களை நிறுவ முற்படாது, தகிக்கின்ற முல்லைத்தீவை தணிக்கும் வகையில் செயற்படும் போது நாமும் இத்தீவின் பொருளாதரத்துக்கு பெரும் பங்காற்றுவோம். ஏனெனில் அதற்கான உடல், உள உறுதியும் பௌதிக வளமும் எங்களிடம் நிறையவே உண்டு – என்றார்.

# ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை

ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்றை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறை கொழும்பு – 5, இலக்கம் 96, பேர்னாட்சொய்சா மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

பயிற்சிப் பட்டறையில் "ஒருங்கிணையும் ஊடகத்துறை:வாய்ப்புக்களும் சவால்களும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதியும் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் பேராசிரியருமான சி.ரகுராமும், "இதழியலில் செயற்கை நுண்ணறிவும் சவால்களும் : கோட்பாட்டு ரீதியான கரிசனைகளும்" என்ற தலைப்பில் சட்டத்தரணியும் ஊடக பயிற்றுவிப்பாளருமான பெனிஸ்லஸ் துஷானும், "செயற்கை நுண்ணறிவு" தொடர்பில் ஊடகவியலாளர் அருண் ஆரோக்கியநாதனும் விளக்கங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.






# கல்லோயா ஆற்றுப் பிரிவின் பெரும்போகம் ஆயத்தக் கூட்டம் நேற்று சம்மாந்துறையில்

(தில்சாத் பர்வீஸ்)

கல்லோயா ஆற்றுப் பிரிவில் பெரும் போக நெற் செய்கையௌ மேற்கொள் ளும் விவசாயிகளுக்கான ஆரம்ப விவ சாயக் குழுக் கூட்டம் நேற்று சம்மாந் துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் சம் மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல் முஹம்மது ஹனீபாவின் ஒருங்கி ணைப்பில் கீழ் அம்பாறை மாவட்ட செய லாளர் சிந்தக அபயேவிக்ரம தலை மையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பெரும்போகத்திற் கான விதைப்புகாலம், நீர்விநியோகம், பயிர்க் காப்புறுதி, விதைக்கும் நெல் லினம், மாடுகளை அப்புறப்படுத்தல், கிளை வாய்க்கால் துப்பரவு போன்ற விடயங்களுக்கான கால அட்டவணையும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இக் கூட்டத்தில் கல்முனை நீர்ப் பாசனத் திணைக்களப் பிரிவில் 10,786 ஏக்கர் காணிகளும், அக்கரைப் பற்று நீர்ப் பாசனக் காரியாலயத்தில் வீரயடி பிரிவில் 3,897 ஏக்கர் காணிக ளும், சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்கள பிரிவில் 22,256 ஏக்கர் காணிகளும் இம்முறை பெரும்போக விவசாயச் செய்கைக்காக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி கல்முனை நீர்ப்பாசொ பிரிவில் எதிர்வரும் 25/10/2025 தொடக்கம் 25/11/2025 வரை விதைப் புக் காலமாக தீர்மானிக்கப்பட்டுள்ள தோடு, விதைக்கும் நெல்லினம் மூன்று தொடக்கம் மூன்றரை மாதம் கொண்ட இனமாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை நீர்ப்பாசன பிரிவுகளில் 20/10/2025 தொடர்க்கம் 20/11/2025 வரை விதைப் புக் காலமாக தீர்மானிக்கப்பட்டுள்ள தோடு விதைக்கும் நெல்லினமாக மூன்று தொடக்கம் மூன்றரை மாதம் கொண்ட இனமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல் மஹ்ரூப், மாவட்ட செயலப் பிரதம கணக்காளர், சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் முஹம்மது அஸ்லம், இறக்காமம் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.எம் ஹம்சார், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நீர்ப்பாசனத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் மற்றும் பொறியி லாளர்கள், கமநல திணைக்கள உயர் அதிகாரிகள், விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், உரக் கூட்டுத் தாபன அதிகாரிகள், நெல் ஆராய்ச்சித் திணைக்கள உயர் அதிகாரிகள், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள், ஒருங் கிணைந்த விவசாய அமைப்பின் தலை வர், அதன் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# நுவரெலியாவில் பெய்த அடை மழையால் மீபிலிமான கிராம நிலங்கள் வெள்ளத்தில்

(ஆர்.எச்.எம்.சுஹெல்)

நுவரெலியா பகுதியில் நேற்றொ பெய்து அடை மழை காரணமாக மீபிளிமான வழியாக நானுஓயா ஆற்றுக்கு செல்லும் ஆக்ரா கிளையாறில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால் மீபிலிமான கிராம விவசாய நிலங்கள், வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

இவ்வாறு அடிக்கடி பெய்யும் மழையினால் ஆக்ரா கிளையாறு பெருக்கெடுத்து விவசாய நிலங்கள் பாதிப்பது வழமையான விடயமாகி உள்ளது.

இந்தக் கிளையாறு குறுகியதாலும், கழிவு பொருள்கள் மற்றும் வீட்டில் பாவிக்கும் கழிவுகளை கிளை ஆற்றில் வீசுவதனால் அதில் அடைப்பு ஏற்படுவதாலும் இவ்வாறு வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மீபிலிமான கிராம விவசாய நிலங்கள் மற்றும் வீடுகளுக்குள் இவ்வாறு வெள்ளநீர் அடிக்கடி உட்புகுவதால் அப்பிரதேசவாசிகள் மிகுந்த அசௌகரிய நிலைமைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு தெரிவித்ததை அடுத்து ஆக்ரா கிளை ஆற்றை அகலப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவர் தெரிவித்தார்







# வவுனியா மாநகர சபை உறுப்பினர் மீது தாக்குதல் மேயர் தலைமையில் குழு பொலிஸில் முறைப்பாடு

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை உறுப்பினர் ஒருவர் மீது மாநகரசபை வளாகத்திற்குள் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேயர் தலைமையில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா மாநகரசபை அமர்வு நடைபெறவிருந்த நிலையில மாநகரசபை மேயர் மற்றும் உறுப்பினர்கள் மாநகர சபையில் பிரச்சன்னமாகியிருந்தனர். இதன்போது மாநகர சபையால் புதிதாக வழங்கப்பட்ட இடத்தில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தும் நபர் அங்குவருகைதந்துமாநகரசபைஉறுப்பினர்கள் சிலருடன் தனது வியாபார நிலையம் தொடர்பில் பேசியுள்ளார்.

இதன்போது அவ்விடத்தில் நின்ற வவுனியா மாநகரசபையின் பண்டாரிக்குளம் வட்டார உறுப்பினர் சி.பிறேமதாஸ் அவர்களுடன், மாநகரசபையால் வழங்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட தனது ஏசி பூட்டிய வர்த்தக நிலையத்தை ஏன் முகப்புத்தகத்தில் பதிவிட்டீர்கள் எனக் கூறி முரண்பட்டுள்ளமையுடன், தகாத வார்த்தை பிரயோகங்களையும் பயன்படுத்தி அந்த மாநகரசபை உறுப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டார் எனப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஏனைய சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களால் அந்த நபர் அங்கிருநது வெளியேற்றப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் மாநகர மேயர் சு.காண்டீபன் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சபை உறுப்பினர்கள் சென்றனர். மாநகர சபை உறுப்பினர் சி.பிறேமதாஸால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியாப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் நபரும் தன் மீது மாநகர சபை உறுப்பினர் தாக்குதல் நடத்தினார் என வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளமையுடன், அவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.







### 30 மீனவர்கள் கைது எதிரொலி:

# உடனடி நடவடிக்கை எடுக்க கோரி மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 30 மீனவர்கள் நேற்று அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில், இதுவரை சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

"இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 30 மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்துத் தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை



எடுக்க வேண்டும்.

5 இந்திய மீன்பிடிப் படகுகள் மற்றும் 47 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். சிறைபிடிக்கப்பட்டவர்களில் தமிழ்நாட்டின் கடலோர கிராமங்களைச் சேர்ந்த 30 மீனவர்களும், நான்கு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளும் அடங்குகின்றன.


இந்தக் கைது சம்பவம் மீனவ சமூகத்தினரிடையே பெருத்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கடலோர மாவட்ட மக்களிடையே அச்சம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. 2025 ஆம் ஆண்டில், ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான மீனவர்கள் கைது செய்யப்பட்ட முதல் நிகழ்வு இதுதான்.

இதுபோன்ற கைது சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவது, நமது மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்குவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தங்களது பாரம்பரிய தொழிலைத் தொடர்வதில் உள்ள மன உறுதியையும், நம்பிக்கையையும் வெகுவாக பாதிக்கும். இதுவரை, தமிழ்நாட்டைச் சேர்ந்த 242 மீன்பிடிப் படகுகளும், 74 மீனவர்களும் இலங்கைக் காவலில் உள்ளனர்.

எனவே, நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு, சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய அதிகாரிகள் மூலம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற கைது சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உரிய தூதரக முயற்சிகளை மேற்கொள்ளவும், கூட்டுப் பணிக் குழுவை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரித்தானியாவை சேர்ந்த 9 பல்கலைக்கழகங்களின் வளாகங்களை இந்தியாவில் அமைக்க நடவடிக்கை

### மோடியுடனான சந்திப்பில் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் உறுதி



பிரித்தானியாவை சேர்ந்த 9 பல்கலைக்கழகங்கள் தங்கள் வளாகங்களை இந்தியாவில் அமைக்க உள்ளன என அந்த நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் அறிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் இரண்டு நாள்கள் விஜயமாக நேற்று முன்தினம் இந்தியா வந்தார். இதையடுத்து, இந்தியா - பிரித்தானியா இடையே மிகப் பெரிய வணிகத் தலைவர்கள் உச்சி மாநாடு மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடியை மும்பையில் கெய்ர் ஸ்டார்மெர் சந்தித்துப் பேசினார். இதன் தொடர்ச்சியாக, இரு தலைவர்கள் முன்னிலையில் இரு நாடுகளின் உயர் மட்டக் குழுவினரின் சந்திப்பு நடைபெற்றது.

இதில், கடந்த ஜூலை மாதம் பிரதமர் மோடி பிரித்தானியா சென்றபோது இந்தியா - பிரித்தானியா இடையே கையெழுத்தான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில், வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர் இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் பேசினர். பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் பேசும்போது, சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகம் உட்பட பிரித்தானியாவின் 9 முன்னணி பல் கலைக்கழகங்கள் தங்கள் வளாகங்களை இந்தியாவில் அமைக்க உள்ளன என தெரிவித்தார்.

சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் வளாகம் ஏற்கனவே ஹரியானாவின் குருகிராமில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது முதல் ஆண்டு மாணவர்கள் இதில் சேர்ந்துள்ளனர். பிரித்தானியாவின் லிவர்பூல் பல்கலைக்கழகம் பெங்களூரிலும், யோர்க் பல்கலைக்கழகம் மும்பையிலும் தங்கள் வளாகங்களைத் திறக்க உள்ளன. இதேபோல், அபெர்டீன் பல்கலைக்கழகமும், பிரிஸ்டல் பல்கலைக்கழகமும் மும்பையில் தங்கள் வளாகங்களைத் திறக்க உள்ளன.

லான்ஸ்காஸ்டர், சர்ரே ஆகிய பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்கள் வளாகங்களை அமைக்க ஒப்புதல் பெற்றுள்ளன என ஸ்டார்மெர் தெரிவித்துள்ளார்.

இவை, அடுத்த ஆண்டு முதல் தங்கள் வளாகங்களைத் திறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மாணவர்கள் நாட்டை விட்டு வெளியேறாமல் உலகத் தரம் வாய்ந்த கல்வியைப் பெறும் நோக்கில் இந்த முயற்சியை இந்திய அரசு எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஷேக் ஹசீனாவை கைது செய்யுமாறு சர்வதேச குற்ற நீதிமன்றம் உத்தரவு

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை, கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பங்களாதேஷில் இடம்பெற்ற மாணவர் போராட்டத்தைத் தொடர்ந்து, பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தமது பதவியை இராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

இதையடுத்து யூனுஸ் தலைமையில் பங்களாதேஷில், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு, எதிராக இனப்படுகொலை மற்றும் பல ஊழல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.




அத்துடன், அவர் மீது தொடர்பான வழக்குகளில் ஷேக் ஹசீனா முக்கிய குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷில் 2026 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. எனினும், ஷேக் ஹசீனா மற்றும் அவரது குடும்பத்தினருக்குப் பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தடை விதித்தும், தேசிய அடையாள அட்டைகள் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்த நிலையில், ஷேக் ஹசீனா உள்ளிட்ட புலனாய்வு அதிகாரிகள் 29 பேரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் 22 ஆம் திகதி அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.




# ஹங்கேரிய எழுத்தாளர் இலக்கிய நோபல் பரிசு

2025 ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு ஹங்கேரிய எழுத்தாளர் லாஸ்லோ கிராஸ்னா ஹோர்காய் என்பவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு மத்தியிலும் கலையின் சக்தியை உறுதிப்படுத்தும் எழுத்தாளரின் தொலைநோக்கு பார்வை கொண்ட பணிக்காக நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# காசா செல்வதற்கு ட்ரம்ப் பரிசீலனை

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான காசா சமாதானத் திட்டத்தின் முதற்கட்டம் தொடர்பான உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, காசா பகுதிக்கு நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட தான் பரிசீலிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

காசாவுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது,

“நான் செய்வேன். நான் அதைப் பரிசீலிப்பேன்,” என்று ட்ரம்ப் பதிலளித்துள்ளார்.

அத்துடன், பெரும்பாலும் எகிப்துக்குச் செல்வார் என்றும் தற்போது பேச்சுவார்த்தைகளுக்காக அனைவரும் அங்குதான் கூடியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





வெள்ளை மாளிகையின் அறிக்கையின்படி, ட்ரம்ப் தனது வருடாந்த மருத்துவப் பரிசோதனைக்காக வால்டர் ரீட் மருத்துவமனைக்குச் செல்லவிருப்பதுடன், அதன் பின்னர் விரைவில் மத்திய கிழக்குக்குச் செல்வது குறித்தும் பரிசீலிப்பார் எனக் கூறப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -10.10.2025




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக் கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத் தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக் கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக் கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். திருப்தி உணர்வு காணப்படும். அதனால் ஆரோக்கிய மும் சிறப்பாக இருக்கும்.




கையிலுள்ள பணிகளை முடிப் பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக் கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள் ளது.




இன்றைய நாள் முன்னேற்றத் திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற் கொள்ளபொறுமைஅவசியம்.பணிச் சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற் கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத் தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -10.10.2025




புத்திசாலித்தனம் மற்றும் சம நிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்த வரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது. மகிழ்ச்சியாக இருப்பதும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிறப்பு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக...!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில், கரோட்டிட் எண்டார்டெரெக்டமி (Carotid Endarterectomy) அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வரலாற்றிலும், கிழக்கு மாகாணத்தின் வரலாற்றிலும் முதன்முறையாக இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரோடிட் எண்டார்டெரெக்டமி என்பது கழுத்தில் உள்ள கரோடிட் தமனியில் இருந்து கொழுப்பு படிவுகளை அகற்றி, பக்கவாதத்தைத் தடுக்கும் ஒரு அறுவை சிகிச்சையாகும். இந்த செயல்முறையில் நாடியை வெளிப்படுத்த கழுத்தில் ஒரு கீறல் செய்து, அதைச் சுத்தம் செய்து, பின்னர் நாடியை மூடி, பெரும்பாலும் அதை இரத்த ஓட்டத்துகாகத் திறந்து வைத்திருக்க ஒரு பேட்ச் பயன்படுத்தப் படுகிறது. குறுகலான நாடிகள் மூளைக்கு இரத்த ஓட்டத்தைத் தடுக்கும்போது, அதை நிவர்த்திக்க இந்த சிகிச்சை செய்யப்படுகிறது.

55 வயதான ஒருவருக்கே இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவருக்கு இடப்புற கரோட்டிட் எண்டார் டெரெக்டமி அறுவைச் சிகிச்சை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியர் நதுன் மொஹோட்டி மற்றும் அவரது குழுவால் குறித்த சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.